Stories for School Reading No. 4.

# கதாரஸ மஞ்சரி.

A COLLECTION OF MORAL, RELIGIOUS, & ROMANTIC STORIES FROM PURANIC SOURCES

—o—

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது.

—o—

BY

எஸ். எக்ஞஸ்வாமி

AND

எம். எம். நாராயணஸ்வாமி அய்யர்

(இரண்டாவது பதிப்பு.)

PUBLISHED BY

V. S. VENKATARAMAN & CO.,

BIG STREET, KUMBAKONAM.

1924.

14 MAY 1924

Copyright] [Price As. 5.

494·81186
1323
224874
031,33K
N24

DEDICATED

TO THE

CHILDREN OF THE MOTHERLAND

800.JJ......

# PREFACE.

This book is written on the lines of the series "Stories for School-reading". It is a collection of Moral Stories from Puranic Sources, preserving the spirit of the original and is intended to be used as a non-detailed reader in the lower forms of our schools.

The authors take this opportunity to express their gratitude to many friends who have shown appreciation of their earlier publications and hope that the same welcome will be accorded to this also.

S. Y.
M. M. N

# CONTENTS


| | | |
|---|---|---|
| 1. The king and the physician. | Page. | 1 |
| 2. The story of Bhupala. | „ | 9 |
| 3. The story of Vikramakedu. | „ | 24 |
| 4. Three princess. | „ | 35 |
| 5. Generous king. | „ | 40 |
| 6. The Story of Dhileepa. | „ | 47 |
| 7. The king and his priest. | „ | 54 |

# கதாரஸமஞ்சரி.

## கதை--1.

" நெடியது காண்கலாய் நீயெளியை நெஞ்சே,
கொடியது கூறிஞய் மன்ற அடியுளே,
முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு,
பிற்பகற் கண்டுவிடும்."

விலாஸபுரமென்னும் நகரத்தில் வினயசீலன் என்னு மரசன் ஆண்டுவந்தான். அவன் தன் நாயகியாகிய கமலப்ரபை என்னும் இராணியை இழந்து, பிறகு மணம்புரியாமல் தேவஸ்திரீகளுடன் ஸதா தன் காலத்தைக் கழித்து வந்தான். இவ்வாறு பலநாட்கள் சென்றபிறகு, அழகைக் குலைக்கும் மூப்பு அரசனைப் பீடிக்க ஆரம்பித்தது. அதைக் கண்டு அரசன்பயந்து, "அந்தோ! பனியில் கருகிப்போன தாமரையைப்போன்ற என்முகத்தை என் ஸ்திரீகளிடம் எப்படிக் காட்டுவேன்? அந்தோ! விதியே! உன்னை வெல்லுவது எவராலாகும்?" என்று துக்கித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் தருணசந்திரன் என்ற வைத்திய நிபுணன் வர, தன் குறைகளைச் சொல்லிக்கொண்டான். அதற்கு அவ்வைத்தியன், "அரசன் முழுமூடன்; ஆகையால் இவனிடமிருந்து கொஞ்சங்கொஞ்சமாகப் பணம் பறிக்கலாம்" என்று யோசித்து, "அரசே! தாங்கள் எட்டுமாதகாலம் ஒரு நிலவறையிலிருந்து மருந்து சாப்பிட்டுவந்தால் மூப்புத்தொலைந்துவிடும்" என்றான்.

இதைக்கேட்டு இறைவன் ஒரு நிலவறையை விரைவில் தயார் செய்யச்சொல்லி வேலைக்காரர்களுக்குக் கட்டளையிட்டான். நிலவறையும் தயாராகிவிட்டது. மந்திரிகள், மன்னவன் வைத்தியன் வலையில் சிக்கிக்கொண்டிருப்பதைப் பார்த்து, "வெற்றிவேந்தே! முற்காலங்களில் முனிவர்களின் தவத்தாலும், யுகத்தின் பிரபாவத்தாலும் ரஸாயனங்கள் செய்யப்பட்டன. இக்காலங்களில் அவ்விரஸாயன முறைகள் அறிய வந்திருந்தாலும் அவற்றிற்கு வேண்டிய சரக்குகள் கிடைக்காமையால் இப்பொழுது செய்யப்படும் ரஸாயனங்கள் நன்மை செய்வதற்குப் பதிலாகத் தீமையேசெய்யும். ஆதலால் இக்காரியம் செய்வது தகுதியன்று. தீயோர் நல்லோர்க்குப் பொய்சொல்லி, ஆசைமூட்டி, தங்கள் காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளுகின்றனர்" என்றனர்.

சிற்றின்பத்திலாழ்ந்த மூடர்க்கு யோசனை ஏது? விஷயவாஸனை பலமாய் ஏறி யிருந்தபடியால், அரசனுக்கு வைத்தியன் வார்த்தைகள் ஏறினவேயன்றி இவ்வுபதேச மொழிகள் பயனற்றுப்போயின.

வேந்தன், வைத்தியன் சொற்படி தன் பரிவாரங்களையெல்லாம் வெளியில் விட்டுவிட்டுத் தான்மட்டும் தனியாய் அந் நிலவறையில் இறங்கினான். மருந்துவகை செய்ய வைத்தியன் ஒரு வேலைக்காரனோடு நிலவறையின் மேலே இருந்தான். தன் மனதிலுள்ள அஞ்ஞான விருள்போலப் பரவி நிறைந்த இருளோடுகூடிய அந்நிலவறையில் வேந்தன் வஸிக்கத் தொடங்கினான். இவ்வாறு ஆறு மாதங்கள் கழிந்தன. மன்னவன் முகம் முன்னையிலும் மிகவும் வெளுத்துத்திரைகண்டது. அதுகண்ட வைத்தியன் ஒரு சூது செய்தான். அரசனைப்போன்ற உருவமுடைய ஒரு வாலிபனைத்தேடிப் பிடித்து வந்தான். அவனைத் தான் அரசனுக்கினால் அவன் தனதுசொற்படி நடக்கவேண்டு

மென்று அவனுடன் ஒப்பந்தம்பண்ணிக்கொண்டான். அவனை அந்நகரத்திற்கு வெளிப்புறம் அழைத்துவந்து ஓரிடத்தில் இருத்தினன். பிறகு ஊருக்கு வெளிப்புறமிருந்து அரசனிருக்கும் நிலவறைக்கு ஒரு சுரங்க முண்டாக்கினன். ஒருநாள் அரசன் இரவில் தூங்குகையில் அவனைக் கொன்று அச்சுரங்க வழியாய்ப் பிண ்தை வெளியே கொண்டுபோய், ஊருக்கு வெளியிலுள்ள பாழுங் கிணற்றில் தள்ளிப் பாறைகளைக் கொண்டு மூடிவிட்டான். பின்னர் தான் பேசி ஏற்பாடுசெய்திருந்தவாலிபனை அச்சுரங்கத்தின்வழியாய்நிலவறையில்கொண்டுபோய்ச் சேர்த்து அச்சுரங்கத்தை அடைத்துவிட்டான்.

நாட்கள் சில சென்றதும் ஒருநாள் காலையில் வைத்தியன் இராஜ்ய காரியஸ்தர்களை வரவழைத்து "நான் அரசனை ஆறு மாதங்களுக்குள் வாலிபமாக்கிவிட்டேன். இன்னும் இரண்டு மாதங்கள் மீதி யிருக்கின்றன. அவற்குள் அவர் உருவம் இன்னும் அதிகமாக மாறிவிடும். அப்பொழுது முன்னிருந்ததை விட மகா காந்திமானக இருப்பார். தாங்கள் யாவரும் நிலவறை வாசலில் அரசன் பேட்டிக்கு வாருங்கள்" என்று சொல்லி, அவர்களை நிலவறை வாசலுக்கு அழைத்துப் போய், அதிலிருந்த வாலிபனுக்குத் தான் சொல்லிவைத்திருந்த சங்கேதப்படி ஒவ்வொருவருடைய பெயரையும் உத்தியோகத்தையும் தெரிவித்து அவர்களை அடையாளங் கண்டு பிடிக்குமாறு செய்தான். அவன் இவ்வாறு ஒவ்வொரு நாளும் வெவ்வேறு மனிதர்களை அழைத்துவந்து பரிச்யம் செய்வித்தான். இம்மட்டோ? அரசனது ஸ்திரீகளைக்கூட அவன் அறியும்படி செய்தான்.

எட்டு மாதம் நிறைந்தவுடன், பலவித ஆகாரங்களை யுண்டு கொழுத்துப்போயிருந்த வாலிபனை வைத்தியன் வெளியில் அழைத்துவந்து "அரசனை என் வைத்தியத்தால் தான் வாலி

னையும் மரணமற்றவனுப் மாக்கிவிட்டேன்; அதை யாவரும் பாருங்கள்" என்றான். இதைப் பார்த்து இராஜ்ய காரியஸ் தர்கள் ஒன்று சேர்ந்து, அரசன் வைத்தியனது ஔஷதங்க ளால் யௌவனம் பெற்றதாய் எண்ணி ஆனந்தமடைந்து, அரசனைப்புடை சூழ்ந்தார்கள். பிறகு அவ்வாலிப வேந்தன் ஸ்நானஞ்செய்து சிங்காசனத்தில் உட்கார்ந்து மந்திரி முதலி யவர்களைக் கூட வைத்துக்கொண்டு இராஜ்ய காரியங்களை நடத்தலானான்.

காவலன் வாலிபனானதை நகரத்தார் யாவரும் திருவிழா வாகக் கொண்டாடினார்கள். அதன்பின் அஜரன் (மூப்பற்ற வன்) எனப் பெயர்பெற்ற அவ்வரசன் இராஜ்யத்தை ஆள வும் ஸ்திரீகளுடன் வாழ்நாளைக் கழிக்கவும் தொடங்கினான்.

கொஞ்சகாலம் கழித்தபிறகு அஜரன், பிஷக்சந்தி ரன், பத்மதரிசனன் என்னும் தன்னிருதோழர்களையும் வர வழைத்துத் தனக்கு அந்தரங்க மித்திரர்களாகக் கொண்டு அவர்களுக்கு யானை, குதிரை, கிராமம் முதலியவற்றைக் கொடுத்தான். தருண சந்திரனுக்கு அவன் செய்த காரியத் திற்காக ஏதோமரியாதை செய்தானேயன்றி அதிகம் ஏதும் செய்யவில்லை. தருணசந்திரன், அஜரராஜன் தன்னிச்சைப் படி நடப்பதைப் பார்த்து, ஒருநாள், "மன்னவ! என்னை லக்ஷியம் செய்யாமல் நீர் இஷ்டப்படி நடக்கிறீரே? நான் தம்மை அரசனாக்கினேனென்பதை மறந்துவிட்டீரோ?" என்றான். அஜரராஜன் கொஞ்சமேனும் தயங்காமல் தைரி யத்துடன், "அன்ப! நீ ஒன்றும் தெரியாதவன்போலும் இவ்வுலகில் ஒருவனை ஒருவன் கெடுக்கவாவது உயர்த்தவாவது எவ்வாறு இயலும்? முற்பிறப்பில் செய்த கர்மங்களே நமக் குப் பெருமையையும் சிறுமையையும் உண்டாக்குகின்றன சுகதுக்கங்களையும் கொடுக்கின்றன. மழை வறண்டகாலத்தில்

அதைக்கொடுப்பதற்கும் அது அதிகப்பட்டால்அதைத்தணிப் பதற்கும் எவருக்கும் ஆற்றல் இல்லாமைபோல, ஒருவனுக் குத் தீவினைப் பயன் நேரிட்டபோதும் நல்வினைப் பயன் நேரி ட்டபோதும் அவைகளைத்தடுக்க யாராலுமாகாது. உலகில் யாவரும் நன்மையையே விரும்புகின்றனர். தீமையை எவரும் விரும்புவதில்லை. ஆயினும் அவர்கள் விருப்பிற்கும் விரும்பா மைக்கும் ஏற்ப ஒன்றும் நடப்பதில்லை. ஒரேதாயின் வயிற்றில் பிறந்த பிள்ளைகளுள் ஒருவன் அறிவாளியாயும், ஒருவன் அறி விலியாயும், ஒருவன் செல்வ வானாயும், ஒருவன் தரித்திரனா யும், ஒருவன் ஆரோக்கியவானாயும்,ஒருவன் நோயாளியாயும், ஒருவன் நொண்டியாயும், ஒருவன் குருடனாயுமிருப்பதற் குக்காரணம் அவர்கள் முற்பிறப்பில் செய்த கர்மத்தை யேயன்றி வேறெதைக் காரணமாகக் கூறமுடியும்? உனக்கு வீண் அகம்பாவம் வேண்டாம். இவ்விராஜ்யம் எனக்குக்கிடை த்தது உன் உதவியால் அன்று; என்தவத்தால் கிடைத்துள் ளதென அறிக. இதன் உண்மையை உனக்கு விரைவில் நேரிற் காட்டுகிறேன்'' என்றான். உடனே வைத்தியன் தனக்குள், "ஏது! இவன் ஞானியைப்போல் துணிவாய்ப்பதில் சொல் லுகிறான். முன்னிருந்த அரசன் இவனிலும் என்விஷயத் தில் நல்லவன். அவன் எனக்குத் தக்க மரியாதைசெய்து என்னிடம் மதிப்பும் வைத்தவன். இவனுக்கு என் அயோ க்யதை தெரியுமாதலின் என்பால் மதிப்பும் விசுவாஸமு முண் டாவது கடினம். ஆகையால் இவன் என்பால் எவ்விதம் நட ந்து கொள்ளுகிறானோ, அவ்விதத்தை நானும் அனுஸரிப்பதே தகுதி. இராஜ்யம் தனது நற்கருமத்தால் கிடைத்ததாயும், அதன் உண்மையை நேரில் காட்டுவதாயும் கூறுகிறானே; அதையும் பார்ப்போம்'' என்று நினைத்துத் "தாங்கள் கூறு வதன் உண்மையை அறிய விரும்புகிறேன்'' என்றான்.

ஒருநாள் அஜராஜன் தருணசந்திரனுடனும், மற்றுஞ் சில நண்பர்களுடனும் உலாவ நகர்க்கு வெளியேபோனான். அவர்கள் ஓர் ஆற்றங்கரைக்குவந்து சேர்ந்தனர். அச்சமயம் ஆற்றுப் பிரவாகத்தில், பொன்னாலாகிய தாமரைமலர்கள் ஐந்து தென்பட்டன. உடனே அரசன் வேலைக்காரனை அனுப்பி அம்மலர்களைக்கொண்டு வரும்படிசெய்து, தனதருகி லிருந்த தருணசந்திரனைப்பார்த்து, "இப்பொற்றாமரைகளைக் கண்டு எனக்கு வெகு ஆச்சரிய முண்டாகியிருக்கிறது. நீ தயைசெய்து இவ்வாற்றின் உத்பத்தி ஸ்தானம்வரையில் சென்று, இம்மலர்கள் எங்கே, எவ்வாறு உண்டாகின்றன என்பவற்றைக் கண்டறிந்துவருக என்றுரைத்துத் தனது நகரத்திற்குச் சென்றான்.

அவ்வைத்தியன் அரசன காட்டிய வழியைப் பின் பற்றிப் பிரயாணஞ் செய்யலானான். இவ்வாறு அவன் செல்லுகையில் ஆற்றங்கரையில் ஒரு சிவாலயம் தென்பட்டது. அவ்வாலயத்திற்கு எதிரில் ஆற்றங்கரையில் ஒரு ஆலமரம் இருந்தது. அவ்வாலமரத்தில் ஒரு மனிதனுடைய எலும்புக்கூடு தொங்கிக் கொண்டிருந்தது. தருண சந்திரன் வழிநடந்த சிரமத்தால் களைப்படைந்து நதியில் ஸ்நானஞ் செய்து, சிவ பூஜைசெய்து, சிரம பரிகாரம் செய்துகொள்ள உட்காருகையில் வானம் இருண்டு மழை பொழியத்தொடங்கிற்று. அம்மழை ஆலமரத்தில் தொங்கிக்கொண்டிருந்த எலும்புக் கூட்டின்மீதும் விழுந்தது. அக்கூட்டிலிருந்து மழைஜலம் அம்மரத்துக்குக்கீழே ஓடும் ஆற்றுநீரில் விழுந்தது. உடனே அதிலிருந்து பொற்றாமரைகள் உண்டாயின. இதுகண்ட வைத்தியன், "இஃதென்ன ஆச்சரியம்? உண்மையை விசாரிப்போமென்றால் இவ்விடம் ஒருவரையும் காணேமே? அதிவிசித்திரப் பிரம்ம சிருஷ்டியின் வல்லமையை அறியவல்லார்யா

வர்? இப்பொழுது அவ்வெலும்புக் கூட்டிலிருந்து நீர்த்துளி கள் ஆற்றில் விழுந்து பொற்றாமரைகளாகின்றனவே. இத்தீர்த் தத்தில் அக்கூட்டைத் தள்ளிவிடுகிறேன். அங்ஙனம் செய் வனேல் அதன் முதுகிலிருந்து பொற்கமலங்கள் உற்பத்தியா கும். இது பொய்க்குமாயின் அதைத் தீர்த்தத்தில் போடு வதனால், எனக்கு அதை அக்கினி ஸம்ஸ்காரஞ்செய்த புண் ணியமாவது கிடைக்கட்டும்'' என்று ஆலோசித்து மாக்கிளையி லிருந்து அக்கூட்டை ஜலத்தில் தள்ளினான். அப்பொழுது அதன் முதுகிலிருந்து பொற்றாமரைகள் உண்டாகக்கண்டான்

பிறகு வைத்தியன் மறுதினம் அவ்விடம் நீங்கி, விலாஸ புரம் வந்து, சங்கதி முழுமையையும் அரசனிடத்தில் தெரிவித் தான். அப்பொழுது காவலன் வைத்தியனைப்பார்த்து, "நண்ப! நீ கண்ட பொற்றாமரை உள்ள இடம் சிவபிரானது புண்ணிய க்ஷேத்திரம்; அவ்விடம் ஆலமரத்தில் நீ கண்ட எலும்புக்கூடு என்னுடைய பூர்வஜன்மதேகம். நான் முன் ஜன்மத்தில் அக்ஷேத்திரத்தில் அவ்வாலமரத்துக் கிளையில் தலைகீழாகத் தவம் செய்து உபவாஸமிருந்து என் தேகத்தை விட்டேன். எனது தவ மகிமையால், என் எலும்புக்கூட்டிலிருந்து விழும் நீர்த்துளிகள் ஆற்று நீரில் விழும்பொழுது அதிலிருந்து பொற் றாமரைகள் உண்டாகின்றன. அக்கூட்டை நீ நீரில் தள்ளியது சிறந்த காரியமாகும். ஏனெனில் நீ பூர்வ ஜன்மத்தில் என க்கு நண்பனாயிருந்தாய் இந்த பிக்ஷச்சந்திரனும் பத்ம தரிசனனும் கூட அந்த ஜன்மத்திலேயே எனக்கு நண்பர் களாயிருந்தனர். பூர்வ ஜன்மத்தவ மஹிமையால் எனக்குப் பூர்வ ஞான மிருக்கிறது; இந்த இராஜ்யமும் எனக்குக் கிடை க்கிறது. இவ்விஷயத்தை நான் உனக்கு ஒரு யுக்தியால் காட்டினேன். நீ நீரில் தள்ளிய எலும்புக்கூட்டை நான் அடை யாளம் சொல்லி எல்லா விஷயத்தையும் தெரிவித்தேன்.

ஆகையால் நீ "இவனுக்கு நான் இராஜ்யம் கொடுத்தேன்" என்று கொள்ளும் கர்வத்தை விட்டு விடு. உன் வீண் கவலையை ஒழி! முன்னிருந்த அரசன் நிஷ்காரணமாக மரணமுற்றதற்கும் காரணம் அறிவேன்; ஆயினும் அவனைப் பொருளாசையாற் கொன்ற மகாதுரோகியாகிய உனக்கு அதை வெளியிட எனக்கு மனமில்லை. கூடிய சீக்கிரத்தில் நீ அவனிலும் கொடிய மரணம் அடைவாய். மறுமையிலும் மகத்தான துயரம் அனுபவிக்க வேண்டியவனே. மனிதனுக்கு நன்மை தீமைகளைக்கொடுப்பது முற் பிறப்பிற் செய்த இருவினையுமேயன்றி வேறல்ல. எப்பிராணியும் பிறந்தது முதல் இறக்கும் வரை பூர்வ ஜன்மத்தில் செய்த கர்மத்தின் பலனை அநுபவிக்க வேண்டியதே" என்றான்.

இவ்வாறு இறைவன் செய்த உபதேசத்தைக் கேட்டுத் தருண சந்திரன் நல்வழிப்பட்டு மன்னவனை ஸேவிப்பதே தனக்குச் சுகமென்றெண்ணித் தன் வீடு போய்ச் சேர்ந்தான். உதார குண சீலனும், பூர்வ ஜன்ம ஞானம் பொருந்தியவனுமாகிய அரசன், தருணசந்திரனுக்கு வேண்டிய தனம் கொடுத்து அவன் யோக்கியதைக்குத் தக்கபடி மரியாதை செய்தான். பின்பு வேந்தன் பகைவர்கள் பாதையின்றிக் கிடைத்த இராஜ்யத்தை நீதி வழுவாது பரிபாலித்துக்கொண்டு தனது நண்பர்களுடன் வாழ் நாட்களை இன்பமாய்க் கழித்தான்.

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்."

"ஊழிற்பெருவலியாவுள மற்றொன்று
சூழினுந்தான் முந்துறும்."

சுபம்.

## கதை—2.

"வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பையில்"

முன்னொரு காலத்தில் தேவபுரம் என்று ஒரு நகரம் இருந்தது. அதில் பங்கஜவர்மா என்றொரு அரசன் செங்கோல் செலுத்திவந்தான். அந்நகரத்தில் உயர்குலத்திலுதித்த பங்கஜலோசனன் என்னும் ஒரு அந்தணன் வசித்துக் கொண்டிருந்தான். அவ்வந்தணனுக்கு அவனுக்கேற்றபடி, நாணமும் நல்லொழுக்கமும் பொருந்தியவளும், மற்றொரு ஸரஸ்வதி யென்றும் லக்ஷ்மி யென்றும் சொல்லத்தக்கவளுமான தேவமதி என்று ஒரு மனைவி யிருந்தாள். அவள் எப்பொழுதும் தன் பர்த்தாவின் பணிவிடையிலேயே கண்ணையிருந்து வந்தாள். தேவமதியும் பங்கஜலோசனனும் உயிரும் உடலும்போலவும், எள்ளும் எண்ணெயும்போலவும், நகமுஞ் சதையும் போலவும், பூவும் மணமும்போலவும் இன்பமாய் இல்லறம் நடத்தி வாழ்ந்து வந்தனர். அப்பால் ஒரு சமயம் தேவமதி வயிற்றில் ஸர்வலக்ஷண ஸம்பன்னனான ஒரு புத்திரன் பிறந்தான். அவன் பிறந்த காலத்தில் ஆகாசவாணி, "பங்கஜலோசன! உனது புதல்வனுக்குப் பூபாலன் என்று பெயர் இடு. அவன் அரசனாகிப் பூமியை ஆளுவான். உனக்கு அவனால் நிச்சயமாய்ச் சுகமுண்டாகும்" என்று கூறினான்.

பங்கஜலோசனன் புத்திரன் பிறந்ததை மிகச் சிறப்பாகக் கொண்டாடி, ஆகாசவாணி கூறியபடி அவனுக்குப்பூபாலன் எனப் பெயர் வைத்தான். பின்பு அப்புத்திரன் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, ஸகல கலைகளுங் கற்று, அஸ்திர சஸ்திரப்பயிர்ச்சியில் மிகுந்த வல்லமையைப் பெற்றான். இவனிடம் உண்மையும், உறுதி

யும், வணக்கமும், ஞானமும், கல்வியும், அழகும், ஆண்மையும், வீரமும், வெற்றியும், தயையும், சாந்தமும், அன்பும், அருளும், ஒழுக்கமும் குடிகொண்டிருந்தன. அவன் நற்குண நற்செய்கைகளுக்கு இருப்பிடமா யிருந்தான். அவன் நாளுக்கு நாள் கல்வியில் தேர்ச்சிபெற்று வருவானாயினன்.

இதற்கு மத்தியில் பங்கஜலோசனன் பத்தினியாகிய தேவமதி ஸர்வாங்க ஸுந்தரியான ஒரு பெண்ணைப் பெற்றாள். அவளுடைய அழகைக்கண்டு திலோத்தமையும் பொறாமைகொண்டாள். அவளுக்குப் பங்கஜவதனை எனப்பெயரிடப்பட்டது. பூபாலனும் பங்கஜவதனையும் தமது தகப்பன் வீட்டில் சுகமாக வளர்ந்து வந்தனர்.

இவ்வாறு சில வருஷங்கள் சென்றபின் அந்நாட்டில் மழையில்லாமையால் சூரியகிரணங்களால் பயிர்கள் யாவும் தகிக்கப்பட்டு எரிந்துபோயின. நாடுமுழுவதும் நீலநிறம் பரவியது. அப்பஞ்சத்தின் கொடுமையால் அரசன் தரும மார்க்கத்தைவிட்டுத்தன் குடிகளிடமிருந்து பணம் பறிக்கவும், அவர்கள் பொருளைக் கொள்ளையிடவும் ஆரம்பித்தான். அப்பொழுது தேவமதி, தன் பர்த்தாவாகிய பங்கஜலோசனனைப் பார்த்து, 'பிராணநாதா! நாம் இங்கேயே இருந்துகொண்டிருந்தால் நமது குழந்தைகள் பசியால் இறந்துபோனால் என்னசெய்வது? ஆதலால் நாமெல்லோரும் எனது பிறந்தகத்துக்குப்போவோம்" என்றாள். பங்கஜலோசனன் அதனைக்கேட்டுத் தன் நாயகியை நோக்கி "இவ்விதப் பஞ்சகாலத்தில் பெரிய வீட்டிலிருந்து வெளியிற் புறப்பட்டுப்போதலும் அதைக் காலிசெய்தலும், மிகத்தவறு. ஆதலால் நான் இவ்விரண்டு குழந்தைகளையும் அழைத்துக்கொண்டுபோய் உனது தகப்பனார் வீட்டில் விட்டுவிட்டுவருகிறேன். நீ இங்கேயே இரு; நான் வெகு சீக்கிரமாக வருகிறேன்" என்றான். இவ்

விதம் சொன்னவுடன் தேவமதி, அப்படியே சரியென்று சொன்னாள்.

பின்பு பங்கஜலோசனன் தன் மனைவியைத் தன் வீட்டில் வைத்துவிட்டு தன் குமாரன் பூபாலனையும் குமாரி பங்கஜவதனையையும் அழைத்துக்கொண்டு ஊரைவிட்டுப் புறப்பட்டுத் தன் மாமனார் ஊரை நோக்கிச்சென்றான். இம்மூவரும் மூன்று நாள் இப்படி நடந்து ஒரு பெரிய ஆரண்யத்தை யடைந்தனர். அவ்வாரண்யத்தில் பெருமணல் நிறைந்த மைதானங்கள் பல விருந்தன. அம்மணல் வெயிலில் காய்ந்து கொதித்துக் கொண்டிருந்தது. சுற்றியிருந்த மரங்கள் பல பட்டுப் போனவை போக பாக்கி யிருந்தவை இலைகள் உதிர்ந்து பசுமையின்றி வதங்கிப் போயிருந்தன. இவ்வாறு பயங்கரமான பாழும் பிரதேசத்தில் அவ்விரு பாலகர்களுக்கும் பொறுக்க முடியாத தாகம் உண்டாயிற்று. உடனே பங்கஜலோசனன் அவ்விரு பாலர்களையும் அங்குஓரிடத்தில் உட்கார வைத்து நீரைத்தேடிக்கொண்டு நெடுந்தூரம் சென்றான். அவ்வமயம் பில்லர்கள் என்னும் வேடர்களுக்கரசனாகிய சிங்கப் பல்லன் என்பவன் ஏதோ ஒரு காரியமாகச் சென்று பரிவாரங்களுடன் திரும்பி வந்தான். அப்பொழுது அவன் தற்செயலாய்ப் பங்கஜலோசனனைப் பார்த்து, "ஆ! நீர் எதைத் தேடிக்கொண்டு இவ்வாறு திரிகின்றீர்?" என்று கேட்க: பங்கஜ லோசனன், ஜலத்தைத் தேடிக்கொண்டு திரிகின்றேன் என்றான். அப்பொழுது அப்பில்லராஜன், தன் பரிவாரங்களுக்கு ஜாடைசெய்து "இவ்வந்தணனை அழைத்துப்போய் ஜலமிருக்கு மிடத்தில் விடுங்கள்" என்றான். அவர்கள் அதைக் கேட்டு, அவன் எண்ணத்தை யறிந்துகொண்டு, நிர்த்தோஷியான பங்கஜ லோசனனைச் சிறைப்பிடித்துத் தங்கள் ஊருக்குக் கொண்டு போனார்கள். பிறகு பங்கஜ லோசனன் காளி

தேவிக்குத் தன்னைப் பலிகொடுக்க அழைத்துப் போகிறார்கள் என்பதை யறிந்து வனத்தில் தான் விட்டு வந்த இரண்டு குழந்தைகளையும் நினைத்துத் துக்கித்தாள். "ஐயோ! குழந்தாய்! பூபாலா! பெண்ணே பங்கஜவதனே! நான் உங்களிருவரையும் நிராதரவாய்க் கானகத்தில்விட்டு வந்திருக்கிறேனே; உங்களைப் புலி கரடிகளுக்கு இரையாக்கினேனே! என்னை இங்கே கள்வர்கள் கொன்று விடப்போகிறார்களே? எனக்கு ஒருவரும் கதியில்லையே? அந்தோ! தெய்வமே! நான் என்ன செய்வேன்? என்று புலம்பிக்கொண்டே அவன் விண்மீதூரும் சுடரைப் பார்த்தான். பார்த்ததும் அவன் விசனத்தை விட்டு அதிக ஆனந்தமடைந்து, "நாம் சூரியனைச் சரணமடைந்தால் எவ்வாற்றானும் அவர் நம்மைக் காப்பாற்றுவார்' என்று எண்ணித் துதிக்கத் தொடங்கினான்:—

'உலகெலாம விளங்கும் ஒப்பிலாமணியே
நலமெலாம் நல்கும் ஞானவாரிதியே
சர்வ சாட்சியாங் தனிப்பெருஞ்சுடரே
நிர்மலப் பொருளே நிகரிலா வருளே
சத்துரு ஜயந்தருஞ் சற்குண மணியே
நத்தித் தொழுபவர் சித்தத்தின்பமே'
உன்னை நினைத்தேன் உன்னைப்பணிந்தேன்
உன்னையன்றி யென்னை யிவ்வேளை
காப்பவரில்லை கனிவொடென் றயரம்
பார்ப்பவரில்லை பரிவாரில்லை
அருணனே போற்றி யமலனே போற்றி
பரமனே போற்றி பகலவ போற்றி.

"ஒ ஆதித்தா! சூரிய நாராயணா! நான் நம்மை நமஸ்கரிக்கிறேன். நீர் பஹிராகாசத்திலும் அந்தராகாசத்திலும் சஞ்சரிக்கின்றீர்? நீர் தேஜோரூபியாயிருக்கின்றீர்? வெளியிருட்டு உள்ளிருட்டு இரண்டையும் நாசமாக்குகிறீர்? நீரே சிவபெரு

மான். நீர் மூவுலகிலும் வியாபித்திருக்கிறீர்? நீர் மங்களத்திற்கு இருப்பிடமாயிருக்கிறீர்? உறக்க நிலையிலிருக்கும் உலகை எழுப்புகின்றீர்? நீரே பிரஜாபதியாயிருக்கிறீர்? இரவில் சந்திரனையும் தீயையும் பிரகாசிக்கச்செய்வதற்காக அவைகளிடம் அன்பு கூர்ந்து தாம் தமது தேஜஸை வைத்து விட்டு மறைந்து விடுகிறீர்? ஓ? சூரிய பகவானே! பின்பு நீர் உதித்தவுடன் அரக்கர்கள் ஓடிப்போகிறார்கள்; திருடர்கள் வல்லமை சித்திப்பதில்லை; குணவான்கள் களிக்கிறார்கள். மூவ்வுலக் கொளியே? நான் தம்மைத் தஞ்சமென்றடைகின்றேன். எனது இன்னலென்னும் இருளை நீக்கி என்மீது கிருபை புரிய வேண்டும்" என்று வேண்டிக்கொண்டான். பங்கஜலோசனன் இவ்விதம் பூரண பக்தியுடன் சூரியனைத் துதிக்கவும் ஆகாசவாணியானவள் "பங்கஜ லோசன? எனக்கு உன்னிடம் சந்தோஷமுண்டாயிருக்கிறது; உனக்குத் தீங்கொன்றும் நேரிடாது; எனது கிருபையால் நீ உனது மனைவி மக்களுடன் மீண்டும் சேருவாய்" என்று சொன்னாள். இதனைக் கேட்ட பங்கஜ லோசனன் மனவிசாரம் நீங்கி வஸ்தசித்தனாயிருந்தான். பின்னர், பில்லர்கள் அவனுக்கு ஸ்நானஞ் செய்வித்துப் போஜனமும் செய்வித்தார்கள்.

இஃது இவ்வாறிருக்க வனத்தில் என்ன நடந்ததென்பதைக் கவனிப்போம். வனத்திலுட்கார்ந்த சகோதர சகோதரிகளிருவரும் வெகு நேரம் வரையில் தகப்பனார் போன வழியைப் பார்த்துக்கொண்டிருந்து, அவர் வராததால், ஏதோ கேடு நேரிட்டதென்று அழத்தொடங்கினர். அப்பொழுது அவ்வழியாய்ப் போய்க்கொண்டிருந்த வியாபாரிகளின் தலைவனான சூடாதான் என்னும் வாணிபன், அக்குழந்தைகளின் அருகே வந்து "இங்கே ஏன் நீங்கள் ஒன்றியாய் அழுது கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டான். குழந்

தைகள் நடந்ததை எல்லாம் சொல்ல, வாணிபன் கருணை கூர்ந்து அண்ணன் தங்கை இருவரையும் தன்னூரில் தன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போய் அச்சிறுவனைத் தன் மகனைப்போல வளர்த்து வந்தான். பூபாலன் அவ்வைசியன் வீட்டிலிருந்துகொண்டு இளவயதிலேயே அக்னியில் ஹோமம் செய்தல் முதலிய அக்கினி காரியங்களை செய்யத் தொடங்கினான். ஒருநாள் தேவபுரத்து அரசனாகிய தேவதர்மன் என்பவனுடைய மந்திரி, அரசன் காரியமாக அவ்வழியாய்ப் போகையில் அவ்வியாபாரி வீட்டுக்கு வந்தான். அம்மந்திரி உயர்குலத்திலுதித்த பிராமணன். அவனுக்கு ஆதிசேஷன் என்று பெயர். அவன் இந்த வியாபாரிக்கு வேண்டியவன். ஆனதால் யானை, குதிரை, காலாட் படையோடு, இவ்வியாபாரி வீட்டில் இறங்கினான். அவன் பூரண தேஜஸ்ஸோடு கூடியவனும், ஜபத்திலும் வைசுவதேவத்திலும் ஆழ்ந்தமனதையுடையவனுமான பூபாலனைப்பார்த்து, 'நீர் யார்' என்று வினவி, அவ்வண்ணன் தங்கை யிருவரும் தன்னினத்தைச் சேர்ந்தவர்கள் என்று அறிந்து, தனக்குக் குழந்தைகள் இல்லாமையால் அச்சிறுவன் சிறுமி இருவரையும் அவ்வர்த்தகனிடம் கேட்டுத் தன்னூருக்கு அழைத்துக்கொண்டுபோய், கல்வி கேள்விகளாலும் செல்வத்தாலும் விளங்கும் தன் மாளிகையில் பூபாலனைத் தனது புத்திரனாய் பாவித்து வளர்க்கத் தொடங்கினான்.

இனிக் கானவர்களால் சிறை பிடிக்கப்பட்டு விடுதலை பெறுமாறு கதிரவனை வணங்கிக்கொண்டிருந்த பங்கஜலோசனன் கதிஎன்ன ஆயிற்றென்று பார்ப்போம். அவன் சிறையிவிடப்பட்டு சிலநாட் சென்றபின் சிங்கப்பல்லன் பங்கஜலோசனனிடம் சென்று "ஓ இருபிறப்பாளா! சூரியதேவன் என் கனவில்வந்து நீ பிராமணனைக் கொல்லாதே; அவனுக்குவேண்டிய உபசாரஞ்செய்! என்று கட்டளையிட்டிருக்கிறார். ஆகை

யால் நீர் எழுந்திருந்து உமக்கு இஷ்டமான இடத்திற்குச் செல்லலாம்!'' என்று சொல்லி அவனைச் சிறையிலிருந்து விடுவித்து, அவனுக்கு மரியாதைசெய்தான். பிறகு அவன் பிராமணனிடம் முத்து,கஸ்தூரி இவற்றைக் கொடுத்து,முன் அவ்வந்தணன் அகப்பட்டகாட்டில் கொண்டுபோய் விடும்படி இரண்டு பில்லர்களை அனுப்பினுன். இவ்வாறு சங்கடத்திலிருந்து விடுதலை பெற்ற பங்கஜலோசனன் அவ்வனத்தில் தன் பிள்ளைகளைத் தேடத் தொடங்கினுன். அவன் எங்குத் தேடியும் அவர்கள் அடையாளம் கிடைக்காமையால் இன்னும் அதிகமாய் அலையத் தொடங்கினுன். அலைந்து அலைந்து அவ்வந்தணன் கடற்கரையிலுள்ள கமலபுரம் என்னும் நகரத்தையடைந்தான். அந்நகரில் ஒரு பிராமணன் வீட்டில் அதிதியாக இறங்கிப் போஜனமானபின் பேசிக்கொண்டிருக்கையில் பங்கஜலோசனன் தன்கதையைக் கூறினுன். அப்பொழுது அவ்வீட்டு எஜமானன், "ஐபா? சிலநாளுக்குமுன் இந்த ஊரில் சூடாதரன் என்னும் ஒரு வியாபாரி வந்திருந்தான். அவன் தனக்குக் காட்டில் கிடைத்தன ரென்று ஒரு பிராமணச் சிறுவனையும், அவன் தங்கையையும் அழைத்துக்கொண்டிங்கு வந்திருந்தான். அவர்கள் மிகவும் அழகாயிருந்தார்கள். அவன் இவ்விடமிருந்து நாரிகேளத் தீவிற்குச் சென்றுன். அச்சிறுவன் பெயர் என்னிடத்தில் சொல்லவில்லை'' என்றுன்.அதைக் கேட்டு அவன் அவ்விருவரும் தனது குழந்தைகள் தானென்று நிச்சயித்து, அவ்விரவைக் கமலாபுரத்திலேயே போக்கி மறுநாட்காலையில் நாரிகேளத் தீவிற்குச் செல்பவனுகிய விஷ்ணுவர்மா என்னும் வியாபாரியைத் தேடிப்பிடித்து, அவனைச் சிநேகஞ்செய்து புத்திர வாஞ்சையால் அவனுடன் கப்பலேறி நாரிகேளத் தீவிற்குச் சென்றுன். பிறகு அவன் அங்கே இருக்கும் வாணிபர்களை "சூடாதரன் இங்கே வந்திருக்கின்

ருணு?" என்று விசாரித்தான். அதற்கு அவர்கள் "அவன் இங்கேவந்திருந்ததுண்டு; அவனுக்கு இரண்டு சிறுவர் அகப் பட்டிருக்கிருர்கள்; ஆனுல் இப்பொழுது அவன் அவ்விருவ ரையும் அழைத்துக்கொண்டு கடாகத் தீவுக்குப் போயிருக்கி ருன்" என்ருர்கள். அதைக்கேட்ட அந்தணன் கடாகத் தீவிற் குச் செல்வோனுகிய கிருஷ்ணவர்மாவிடம் சிநேகஞ் செய்து கொண்டு அவனுடன் கப்பலேறிக் கடாகத்தீவிற்குச் சென் ருன். அவ்விடம் விசாரித்தபொழுது அவன் கற்பூரத் தீவி ற்குச் சென்றிருக்கிருனென்று தெரியவந்தது. இப்படி அவன் அதிலிருந்து ஸ்வர்ணத் தீவிற்கும், அதிலிருந்து சிங்களத்திற்கும், அவ்விடமிருந்து அவனது இருப்பிட மாகிய சித்திரகூடம் சென்றுவிட்டானென்று கேள்விப்ப ட்டு, அவ்விடமிருந்து அமுர்தசுரபி யென்னும் தன் சொந் தக் கப்பலில் சித்திரகூடத்திற்குச் செல்லும் கோடீஸ்வரன் என்னும் வர்த்தகனேடு சித்திரகூடத்திற்குச் சென்ருன். குழந்தைகளைத் தேடிப் பிடிப்பதில் பிடிவாதத்தோடு கூடிய அப்பிராமணன் அவ்வூரில் போய்ச் சேர்ந்து சூடாதரனிடம் ஸகல விர்த்தாந்தத்தையும் சொல்லச் சூடாதரன், அவ் வந்தணன் வார்த்தையைக் கேட்டுப் பிராமணனது துக் கத்தையறிந்து, தனக்குக்கிடைத்த சிறுவர்கள் இருவருக்குப் பதிலாக வேறு இரு சிறுவர்களைக் காட்டினுன். ஆனுல் அந் தணன் ஆசைக்கு அஸ்தமனம் ஏற்பட்டுவிட்டது. பங்கஜ லோசனன் இவ்விரு பாலர்களையும் பார்க்கும்பொழுது அவர் கள் அன்னியர் குழந்தைகள் என்று தெரிந்தது. இதைப் பார்த்துப் பிராமணன் சோகமேலிட்டு, "ஐயோ! தெய்வமே! என் விதியே! நான் அலேயாத விடமெல்லாம் அலேந்தேனே! மிகுந்த கஷ்டத்தைப் பொறுத்தேனே! பசி தாகத்தைப் பார்க்கவில்லேயே! எனக்கு எனது புதல்வனும் அகப்படவில்

லையே! மகளும் அகப்படவில்லையே! அயோக்கியனுகிய சிற்றரசன் முன்பு ஆசைகாட்டிப் பின்பு அதை ஈடேற்ருது விட்டு விடுவதுபோல, என் பிராரப்தமானது, எனக்கு ஆசைகாட்டி என்னை மோசஞ் செய்துவிட்டது. போக்கிரியான ஒரு பிரபு வீணுக ஒரு மனிதனை இங்குமங்கும் அலைக்கழிப்பது போல என் துர்அதிர்ஷடமானது என்னை இங்குமங்கும் இழுத்தடித்து வெகு தூரம் என்னை அலைய வைத்துவிட்டது'' என்று சொல்லிப் புலம்பினுன்.

இவ்வாறு பிராமணன் துயரப்படுவதைப் பார்த்து தனவாணுகிய சூடாதரன் பலவாறு சமாதானம் சொன்னுன். அதைக்கேட்டுப் பங்கஜலோசனன் வியாபாரியைப் பார்த்து "வியாபாரியே! நான் என்ன செய்வேன்? புத்திரனைக் காணுமல் எனது மனம் எங்கும் செல்லவில்லையே! என் மனதில் குழந்தை எங்கே போனுனேவென்று அநேகவிதமான எண்ணங்கள் உண்டாகின்றன. இப்படி நான் எப்பொழுதும் விசாரப்பட்டுக் கொண்டிருக்கிறேன். எனக்கு எப்படி தைரியமுண்டாகப்போகிறது? ஆனுல் அதிர்ஷ்டத்தின் மஹிமை அதிசயகாமானது என்பது எனக்குத் தெரியும். நான் ஒரு வருஷமாக இப்பூமண்டலத்தில் அலைந்து திரிந்து குழந்தைகளைத் தேடுகிறேன். அவர்கள் எனக்குக் கிடைக்காவிட்டால் நான் கங்கா நதிதீரத்தில் தவம்செய்து பிராணனை விட்டுவிடுகிறேன்'' என்று சொன்னுன். இப்படிச் சொல்லவே அங்கே உட்கார்ந்திருந்த ஞானி, "ஓ அந்தணரே! நீர் நாராயணீ தேவியின் அருளால் உமது மக்களை மீண்டும் காணப் போகிறீர்'' என்ருர். இதைக்கேட்டதும் பங்கஜலோசனனுக்குச் சூரியனுடைய அநுக்கிரகம் நினைவிற்கு வந்தது; திரும்ப மனதில் ஆசைமுளைக்கவே அவன் மனது சமாதானம்அடைந்தது. சூடாதரன் அவனுக்கு அதிதி உபசாரம் செய்ய அதை

ஏற்றுக்கொண்டு அந்தணன் அவ்வூரைக் கடந்து அப்புறம் போனான்.

அப்பால் பங்கஜலோசனன், கிராமங்கள், பட்டணங்கள், தேசங்கள் இவைகளில் தன் மக்களைத்தேடிக்கொண்டு திரிந்து, ஒரு நாள் சாயங்காலத்தில், கதிரவன் மேற்றிசையில் மறையும்பொழுது, விருக்ஷங்கள் ஓங்கி அடர்ந்து வளர்ந்து நிறைந்திருக்கும் ஒரு வனத்தை அடைந்தான். பிறகு அவ்வனத்திலேயே இரவில் வாஸஞ் செய்வதாகத் தீர்மானித்து, கனிகளைப்புசித்து, நீருருந்தி, சிங்கம்முதலிய கொடிய விலங்குகளுக் கஞ்சி ஒரு மரத்தின் மேலேறி உட்கார்ந்தான். இரவில் அவனுக்குத்தூக்கம் வரவில்லை. ஆதலின், அவன் விழித்துக்கொண்டேயிருந்தான். பாதி ராத்திரியில் அவன் உட்கார்ந்திருந்த மரத்தின் கீழே தேவிகள் அநேகர் கூடினார்கள். இத்தேவிக் கூட்டத்தில் நாராயணி முக்கிய தேவியாயிருந்தாள். அத்தேவிகள் தங்கள் தங்களுக்கு ஏற்றவைகளாய்க் கிடைத்த காணிக்கைகளை ஒன்ருய்ச் சேர்த்துத் தேவநாதனாகிய பைரவன் வரும் வழியைப்பார்த்துக் கொண்டிருந்தனர். சிறிது நேரத்திற் கெல்லாம் பைரவநாதன் அங்கு வந்து சேர்ந்தார். தேவிகள் யாவரும் பைரவரைப் பூசித்துத் தங்களுக்குக் கிடைந்த காணிக்கைகளை அர்ப்பணம் செய்து உபசரித்தனர். பின்பு பைரவநாதர் சிறிது நேரம் நர்த்தனம் செய்து உல்லாசமாய் இருக்கத் தொடங்கினார்.

இவற்றை யெல்லாம் மரத்தின்மேலிருந்த பங்கஜலோசனன் பார்த்துக் கொண்டிருந்தான். இப்படி யிருக்கும் பொழுது நாராயணியின் தாதி ஒருத்தி பங்கஜலோசனனைப் பார்த்தாள்; பார்த்தவுடன் அவளுக்கு அவனிடம் ஆசை யுண்டாயிற்று. நாராயணி தேவி இதையறிந்து

அதை மனதில் மறைத்து வைத்துக்கொண்டு, மாத்திலிருக்கும் பங்கஜலோசனனைக் கூப்பிட்டாள். அவன் இறங்கி நாராயணி தேவியிடம் வந்தான். நாராயணி இருவரையும் கூப்பிட்டு, "உங்கள் இருவருக்குள், ஒருவரிடத்தில் ஒருவருக்கு ஆசை உண்டாயிருக்கிறதல்லவா ?" என்று கேட்டாள். அவ்விருவரும் "தாயே! அது உண்மை தான்" என்றனர்.

அதைக்கேட்ட நாராயணி, கோபந்தணிந்து நீங்கள் உண்மை பேசியதால் நான் உங்களிடம் சந்தோஷமடைகிறேன். ஆனதால் நான் உங்களைச் சபிக்கவில்லை என்று கூறிப் பங்கஜலோசனனைப் பார்த்து, "உனக்கு இந்த தாசியை கொடுக்கிறேன்; நீங்கள் இருவரும் சுகமாயிருங்கள்" என்றாள். அதனைக்கேட்டுப் பங்கஜலோசனன் தாஸியைநோக்கி—

"இந்த வுடலுளம் ஐம்பொறி யின்னுயிர் யாவு மணஞ்செய்யும்
அந்த நன்னுளி னென்னில்லவட்ககன்போ டளித்தனன் யான் [பொதுப்
பைந்தொடியே யுனைச் சேர்ந்திடப் பாரிலெனக் குடல் வேறிலை
சிந்தை புலன்களும்வேறிலை சீவனும்வேறிலை சொல்லுவையே."

"நான் பரஸ்திரீயை நினைக்காமல் என் மனதை அடக்க வேண்டியதுதான் எனது கடமைகளில் முதன்மைபற்றியதாகும். நான் உன்னை ஸ்பரிசிக்கமாட்டேன்" என்றான். இவ்வாறு அந்தணன் கூறியதைக்கேட்டு நாராயணி தேவி "பங்கஜலோசன! எனக்கு உன்பேரில் சந்தோஷ முண்டாயிருக்கிறது. உனக்குச் சீக்கிரம் உனது குழந்தைகள் அகப்படுவார்கள். விஷமுதலியவைகளைப் பரிகாரஞ்செய்யும் நீலோற்பல மலரை உனக்குக் கொடுக்கிறேன். இதை வாங்கிக் கொள்! இது ஒருநாளும் வாடாது" என்று சொல்லிப் பங்

கஜலோசனனுக்கு ஒரு கருநெய்தல் மலரைக் கொடுத்துவிட்டுத் தாசியுடன் மறைந்துவிட்டாள்.

அவ்வந்தணன் தேவியிடமிருந்து கருநெய்தல் மலரைப் பெற்றுக்கொண்டு, இரவில் மீந்த பொழுதை அங்கேயே போக்கி, உதயமானதும் பிரயாணஞ்செய்யப் புறப்பட்டான். வெகுதூரம் நடந்து அவன், தன் குமாரன் பூபாலனும் குமாரி பங்கஜவதனையும் இருக்கும் தேவபுரத்திற்கு வந்து சேர்ந்து, அங்கே ஆதிசேஷன் அதிதிகளை ஆதரிப்பவர் என்று தெரிந்துகொண்டு அவர் வீட்டு வாயிலில் வேதபாராயணம் செய்துகொண்டிருந்தார். பிராமணன் வந்திருக்கும் செய்தியை அறிவித்த வாசற்காப்போன் மூலமாய் உள்ளே வரும்படி மந்திரி செய்த உத்தரவை யறிந்து அந்தணன் உள்ளே புக, மந்திரி போஜனம் செய்யவேண்டுமென்று அவரை அழைத்தார். பின்பு அவர் அவ்வூரில் அனந்தன் மடுவென்று ஒரு புண்ணிய தீர்த்தமிருப்பதாகக் கேள்விப்பட்டு அங்கே ஸ்நானம் செய்யச்சென்றார். தீர்த்தமாடித் திரும்புகையில் ஊர் முழுவதும் "ஐயோ? ஐயோ! குடி முழுகிப்போயிற்றே!" என்று ஜனங்கள் அலறுவதைக்கேட்டு அஃதென்னவென்று விசாரித்தார். அதற்கு ஜனங்கள் "இந்த ஊரில் பூபாலனென்று ஒரு பிராமண வாலிபன் இருக்கிறான். அவனையும் அவன் தங்கையையும் சூடாதரன் என்னும் வாணிபன் வனத்திலிருந்து கொண்டுவந்திருந்தான். அமைச்சனாகிய ஆதிசேஷன் அவ்விருவரையும் அவ்வைசியனைக் கேட்டு அழைத்துக்கொண்டு வந்து, தனக்குப் புத்திரபாக்கியம் கிடையாததால், அச்சிறுவனைத் தன் மகனாக வைத்து வளர்த்து வந்தான். அந்த நல்ல பையன் மகாராஜா தாரவர்மாவிற்கும் இராஜ்யம் முழுமைக்குமே பிரிய புத்திரனானான். அவனை இன்று ஒரு கருநாகம் கடித்துவிட்டது. அதனால் ஊர் முழு

வதும் இப்படித் தத்தளிக்கிறது" என்றனர். அதனைக் கேட்டு, அவ்விருவரும் தனது மக்கள் தாமென்று அறிந்து, பங்கஜலோசனன் பறந்துகொண்டு மந்திரியகம் வந்து சேர்ந்தான். வந்து பார்க்கையில் அப்பையனைச் சுற்றி யாவரும் உட்கார்ந்திருந்தனர். பத்மலோசனன் அப்பையனைப் பார்த்து அவன் தனது தனயன் தானென்று தெரிந்துகொண்டு நாராயணி தேவி தனக்குக் கொடுத்திருந்த கருநெய்தல் மலரை நாசித்துவாரத்தில் பிடிக்கவே, அம்மலரின் வாசனையால் விஷம் இறங்கிவிட்டது. அவ்வாலிபன் தூங்கி எழுந்திருந்தாற்போல் எழுந்து உட்கார்ந்தான். இப்படி அவன் எழுந்துட்கார்ந்ததைக் கண்டு அரசனும் அந்நகரத்தாரும் அன்றையதினத்தை ஒரு உற்சவமாகக் கொண்டாடினர். ஆதிசேஷனும் அரசனும் பிரஜைகளும் பங்கஜலோசனனைத் தேவாம்சமென்று நினைத்து அவருக்கும் அதிகமாகமரியாதை செய்தனர். இவ்வாறு புகழடைந்த பங்கஜலோசனன் தன் மகனையும் மகளையும் பார்த்துக் களிப்புற்று மந்திரி மாளிகையிலேயே இருந்தான். இம்மூவரும் ஒருவரையொருவர் அடையாளங் கண்டுகொண்டாலும், அந்தச் சமாசாரத்தை வெளியிடாது மௌனமாய் இருந்தனர். ஏனெனில், தங்கள் காரியத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமென்ற உத்தேசத்தையுடைய மதியூகிகள், சமயத்தில் தவிர மற்றைய காலத்தில் தங்கள் ஸ்வரூபத்தைக் காட்டமாட்டார்களல்லவா?

அப்பால் அந்நகரத்தரசனாகிய தாரவர்மா பூபாலன் குணத்தைக்கண்டு மகிழ்ந்து தனக்கு ஒரே குழந்தையாகிய ரூபாவதியை அவனுக்கு விவாகஞ்செய்து கொடுத்துத் தன் ராஜ்யத்தில் பாதியை அவனுக்குச் சீராகக்கொடுத்து,முழு ராஜ்யத்தின் விசாரணையையும் அவனிடமே ஒப்புவித்தான். பூபாலன் இவ்வாறு இராஜ்யத்தை அடைந்த பிறகு பங்கஜலோச

னன் தன் விர்த்தாந்தத்தை வெளியிட்டுத் தன் பெண்ணுக்குத் தகுந்தவிடத்தில் மணஞ் செய்வித்தான்.

ஒருநாள் பங்கஜலோசனன் தன் தனயனைநோக்கி, "குழந்தாய்! இப்பொழுது நாம் உன் தாயாரைப்பார்க்க ஊருக்குப் போகவேண்டும். உன் அன்னை உன்னையும் என்னையும் விட்டுப்பிரிந்து நெடுநாளாய்த் துக்கப்படுகிறாள். அவளுக்கு உனக்கு இராஜ்யம் கிடைத்திருப்பதுதெரிந்தால் அவள் ஒருவேளை 'என் புதல்வன் என்னை மறந்துபோய் விட்டானல்லவா?' என்று நினைத்துக் கோபித்து, உன்னைச் சபித்தால் நாம்என்ன செய்வது? பெற்றோர்கள் எந்தப்பிள்ளைகளைச் சபிக்கிறார்களோ அவர்கள் முன்னுக்கு வருவதில்லை. நீ நூறுவயதளவும் அடிமைத்தனம் பூண்டு வழிபடினும், அதுஉன் தாய் ஒரு நாள் வளர்த்ததற்குச் சமமாகாது. பெற்றோர் மனம் கோணமல் நடந்துவருவது புதல்வர் கடமையாகும்.

"பெற்றோர் வாக்கின்படிமைந்தர் பேணிப் புரிதல்கட்மை என<br>
மற்றேவரும் ஒவ்வாராமன், மழுவார்கையன், சாகரர்கள்,<br>
கற்றூர் புகழ்சங்கரகுரு. வெண்காட்டு விமலன் காண்டீபன். (மார்."<br>
பொற்றேள்வீமன், நால்வேதப் பொருள் நேர்வியாசன் இவர்செய்

பெற்றோரைச் சேவித்தால் அச்சேவை, காமதேனுவைப் போலவும், கற்பக விருக்ஷத்தைப் போலவும், சிந்தாமணியைப் போலவும், மனோரதத்தை நிறைவேற்றும். தருமவியாதரின் சரிதை இதற்கு அத்தாட்சியாகும்" என்று சொன்னான். உடனே பூபாலன் தன் தாயைத் தேற்றுவதற்கு ஊருக்குப் போகச் சம்மதித்தான். பிறகு அவன் தன் தர்ம பிதாவாகிய ஆதிசேஷனிடம் தன் ஜனனதேசத்திற்குச் செல்லவேண்டிய அவசியத்தைச் சொல்லி, அவனிடம் இராஜ்யத்தை ஒப்புவித்து, அவனிடமும் அரசனிடமும் விடைபெற்றுக்கொண்டு தன் தகப்பனுருடன் இரவில் புறப்பட்டு ஊர்வந்து சேர்ந்

தான். வஸந்த காலமானது எப்படி தர்சனம் கொடுத்துக் குயில்களுக்கு ஆனந்தமுண்டாக்குகிறதோ, நல்ல அரசன் பஞ்சகாலத்தில் தரிசனம்கொடுத்து ஜனங்களுக்கு உணவளித்து எப்படி களிக்கச் செய்கிறானோ, அவற்றைப்போல, பூபாலன் தன் தாயாருக்கு தரிசனங் கொடுத்து ஆனந்தமுண்டாக்கினான். பங்கஜலோசனன் நடந்த விர்த்தாந்தத்தை ஆதியோடந்தமாய்ச் சொல்ல, இஷ்டமித்திரர்கள் யாவரும் கேட்டுச்சந்தோஷித்துப்பூபாலனைப்பெரிதும் கொண்டாடினார்கள். பின்பு பூபாலன் தன் தாயாருடன் சிறிதுகாலம் வசித்துக் கொண்டிருந்தான்.

இவ்வாறு சில நாட்கள் சென்றபின் பூபாலன் தன் பெற்றோரை அழைத்துக்கொண்டு தன் மாமனார் ஊராகிய தேவபுரம் வந்துசேர்ந்தான். பூர்ணசந்திரன் தன் தரிசனத்தால் சமுத்திரத்திலுள்ள ஜலலக்ஷ்மியை எவ்வாறு களிக்கச் செய்கின்றானோ, தாமரைப் பூக்களையும், சக்ரவாகப் பறவைகளையும் கதிரவன் எவ்வாறு களிக்கச் செய்கின்றானோ, சகோரபக்ஷியைச் சந்திரன் எவ்வாறு சந்தோஷிக்கச்செய்கின்றானோ, அவ்வாறு பூபாலன் ஜனங்களுக்கு தரிசனம் கொடுத்துக்களிக்கச்செய்து பெற்றோரும் தன்னுடன்வாழ, ரூபாவதியுடன் இன்பமாய் வாழ்ந்துகொண்டு இராஜ்யத்தை நீதிவழுவாமல் பல்லாயிரமாண்டு பரிபாலனஞ் செய்து கொண்டிருந்தான்.

சுபம்.

## கதை—3.

"செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்றலறிது"

முன் ஒரு காலத்தில் விஜயபுரம் என்றொரு நகரம் இருந்தது. அதில் விக்கிரமகேது என்னும் அரசன் வெகு காலமாய்ச் செங்கோல் செலுத்தி வந்தான். சிற்றரசர்கள் யாவரும் அவனுக்குக்கப்பம் கட்டிவந்தார்கள். அவன் ஸகல கலைகளையும் அறிந்திருந்தான். அவன் குடிகள் விஷயத்தில் தாயைப்போல் அன்பு செலுத்தி வந்தான். வேண்டிய நலன்களை உடனுக்குடன் அளித்து வருவதில் தபோதனரை ஒத்திருந்தான். இவனுடைய ஆட்சியில் பிராமணர் முதலாயினோர் தத்தம் வருணத்திற்கும், ஆசிரமத்திற்கும் உரிய தருமங்களைக் கடைப்பிடித்து ஒழுகி வந்தனர். பெண்கள் யாவரும் தமது கற்பைக் காப்பதிலேயே கங்கணம் கட்டிக்கொண்டிருந்தனர். அவ்வரசன் தருமத்தில் ஆசை வைத்தானேயொழிய ஸ்திரீகளிடமாவது வேட்டையிலாவது வைக்கவில்லை.

ஒரு சமயம், ராஜதேஜஸ்ஸுடன் கூடியவனும், மாளவதேசத்திற் பிறந்தவனும், சுத்தவீரனுமாகிய ஜெயவீரன் என்னும்பிராமணன்சேவகம்செய்வதற்காக அவ்வரசனிடம்வந்து சேர்ந்தான். அவன் குடும்பத்தில் மூன்று பேர் தானிருந்தனர்; காந்திமதி என்னும் மனைவி; வீரவதி யென்று ஒரு பெண்; ஸத்வவரன் என்று ஒரு மகன். அவனுக்குச் சேவகஞ்செய்ய இடுப்பில் அரைக்கச்சையும், இடதுகையில் கேடயமும், வலது கையில் பட்டாக்கத்தியும் ஆகமூன்று கருவிகளே யிருந்தன. இவனுடைய குடும்பம் இவ்வளவு சிறியதாயிருந்த போதிலும் அவன் அரசனிடஞ்சென்று தன் காலக்ஷேபத்திற்காகப்பிரதி தினம் நூறுரூபாய்கள் கொடுக்கும்படிக்கேட்டான். உடனே

வேந்தன் "இவனிடம் ஏதேனும் உத்தம குணம் இருக்கும்" என்று ஆலோசித்து, அவன் வீரியத்தைச் சோதித்துப் பார்ப்பதற்காக அவன் கேட்டபடி கொடுப்பதாக ஒப்புக்கொண்டான். அரசன் அவ்வாறே பொருள்கொடுத்துப் பிறகு சில வேவுகாரர்களை அனுப்பி இவன் இவ்வளவு ரூபாய்களை என்ன செய்கிறானென்று பார்த்துவரச் சொன்னான். ஜெயவீரன் தான் அரசனிடம் பிரதிதினம் பெற்றுக்கொண்டு வரும் நூறு ரூபாய்களில் இருபது ரூபாயைப் போஜனாதிகளுக்காகத் தன் மனைவியிடம் கொடுப்பான். இருபது ரூபாய்களைப் பூஜைக்காகப் புஷ்பம் முதலியவற்றை வாங்குவான். இருபது ரூபாய்களைச் சுற்றத்தார்க்கும் நண்பர்களுக்கும் கொடுப்பான். பாக்கி நாற்பது ரூபாய்களை அதிதிகள், தரித்திரர், நோயாளி முதலியோர்க்கு தானம் செய்வதில் செலவு செய்வான். இவ்விதம் அவன் நாள்தோறும் நூறு ரூபாய்களையும் செலவு செய்து வந்தான். அவன் தினந்தோறும் தனது நித்திய கருமங்களை முடித்து, அரசன் மாளிகையின் வாசலில் இரவிலும் பகலிலும் காவல் காத்துவருவான். இவ்விதம் அவன் செய்து வருவதை வேவுகாரர்கள் அரசனிடம் தெரிவித்தனர். இதைக்கேட்டு அரசன் சந்தோஷித்து வேவுகாரர்களுக்கு விடை கொடுத்தனுப்பிவிட்டான். ஜெயவீரனும் ஸ்நானபானாதி நேரம் போகப் பாக்கிப்பொழுதை இவ்வாறு கையில் ஆயுதமேந்தி அரசமாளிகை வாசலில் காவல் காத்து வருவதில் போக்கினான்.

இவ்வாறு சில நாட்கள் சென்றபின் இச்சுத்தவீரன் பிரதாபத்தைப் பொறுக்க வொண்ணாததுபோல, மாரி காலமானது பயங்கரமாகக் கர்ச்சனை செய்துகொண்டு வந்தது. மழை பிரசண்டமாய்ப் பொழிய ஆரம்பித்தது. சள சள வென்று இடைவிடாது மழை கொட்டியும் ஜெயவீரன் ஒரு

கல்தூணைப்போல அவ்வாசலினின்றும் அசையாமல் நின்றான். விக்கிரமகேது மன்னன் பிரதிதினம் மெத்தை மேலிருந்து ஜெயவீரனைப் பார்த்துவிட்டுப் பிறகு படுக்கப்போவான். ஒரு நாள் காலாபக்கமும் மழைகொட்டிக்கொண்டும், இருள் எங்கும் பாவியுமிருந்த நள்ளிரவில் மன்னவன் ஜெயவீரன் வாசலில் இருக்கிறானா, இல்லையாவென்றறிவதற்காக மெத்தை மேலிருந்து "வாசலில் இப்பொழுது பாராக்கொடுத்துக்கொண்டிருக்கிறது யார்?" என்று கேட்டான். அதைக்கேட்டு ஜெயவீரன் "வெற்றிவேந்தே! தங்கள் சேவகன் ஆஜராயிருக்கிறேன்" என்றான். அதைக்கேட்டு அரசன் "நல்லது இவன் மகா பராக்கிரமசாலிதான். இப்படி மழைவிடாது கொட்டியும் மாளிகைவாசலைவிட்டு அசையாதிருக்கிறானே, இவன் உயர்பதவிக்குவரத்தக்கவன்" என்று மனதில் எண்ணினான். இவ்வாறு அரசன் எண்ணிக்கொண்டிருக்கையில் மனதுருகும்படி ஒரு பெண் அழுதுகொண்டிருந்தது அரசன் காதில் விழுந்தது. அதைக்கேட்டதும் அரசன் "நமது இராஜ்யத்தில் துன்பப்படுபவரேயில்லையே! அப்படியிருக்கையில் இவ்விதம் அழுகின்றவள் யார்?" என யோசிக்கலானான். இவ்வாறு யோசித்து வேந்தன் ஜெயவீரனைப்பார்த்து "ஏ ஜெயவீரா! வெகுதூரத்தில் ஒரு பெண் அழுகிற சப்தம் கேட்கிறது; நீ அவ்விடம் போய் அப்பெண் யார்? அவள் ஏன் அழுகிறாள்? என்பதை விசாரித்துவா?" என்று சொன்னான். அதைக்கேட்டு ஜெயவீரன் அரைக்கச்சையை இழுத்துக்கட்டிக்கொண்டு, 'ஆண்டவன் கட்டளைப்படியே' என்றுசொல்லி, பட்டாக்கத்தியைச் சுழற்றிக்கொண்டு அக்கோரமான இருளில் கிளம்பினான். ஆகாசம் மின்னிக்கொண்டிருந்தது; மழையும் கொட்டிக் கொண்டிருந்தது. மழையால் ஆகாசமும் பூமியும் ஒன்றாகப் போயிருந்ததால் அப்பெண் அழுகைக்குரல் அவ்வளவு செம்

மையாகக் கேட்கவில்லை. இப்படி பயங்கரமான மழையிலும் ஜெயவீரன் போவதைப்பார்த்து அரசன் ஆச்சரியமடைந்து, மெத்தையை விட்டுக் கீழே இறங்கி, தன் கையில் ஒரு கத்தியை எடுத்துக்கொண்டு ஒருவருமறியாதபடி தானும் ஜெயவீரனைப்பின்தொடர்ந்தான்.

ஜெயவீரன் அழுகைக்குரல் கேட்கும் திசையை நோக்கி நடந்து சென்று நகரத்திற்கு வெளியில் ஒரு குளத்தங்கரை வந்து சேர்ந்தான். அவன் பின்னால் அரசனும் மறைவாய். வந்து சேர்ந்தான். ஜெவீரன் அக்குளக்கரையில் "ஏ பிராணநாத! சுத்தவீரா! நீர் என்னை விட்டுப்போனபிறகு நான் எவ்விதம் ஜீவிப்பேன்?" என்று அழுதுகொண்டிருந்த ஒரு பெண்ணைப் பிறகுபார்த்தான். உடனே அவன் அவளைப்பார்த்து" "அம்மா! நீ யார்? உன்புருஷன்யார்? நீ ஏன் அவனைப் பற்றித் துக்கிக்கிறாய்?" என்று கேட்டான். அதற்கு அந்த ஸ்திரீ "ஏ குழந்தாய்! நான் பூதேவி; இப்பொழுது என் கணவன் விக்கிரமகேது மன்னவன்; அவன் இன்று முதல் மூன்று தினங்களுக்குள்ளாக அவசியம் மரணமடைவான் அவ்வரசனைப்போல்வேறொருநாயகன் எனக்குஎங்கேகிடைக்கப்போகிறான்? இக்காரணத்தால்தான் என் துர்பாக்கியத்தைக் குறித்து நான் விசனப்படுகிறேன். தேவலோகத்திலுள்ள சுப்பிரபன் என்னும் தேவன் பின்நடக்கப்போகிற சுபாசுபங்களை ஞானதிருஷ்டியினால் அறிந்தது போல நானும் ஞானதிருஷ்டியால் அறிந்தேன். அந்த சுப்பிரபனுக்கு ஞானதிருஷ்டி யிருந்தது. அவன் அதனால்தான் ஏழுநாள் கழித்துத் தன் புண்ணியம் தேய்ந்துபோவதால் தான் ஒரு பெண் பன்றியின் கர்ப்பத்தில் போய்த் தங்கவேண்டி வருமென்று அறிந்து துக்கித்து 'ஐயோ! ஸ்வர்க்கமே! நான் என்னமாய்ப் பெண்பன்றி வயிற்றிலிருந்து, பிறகு என்னமாகச் சேற்றில்

விழுந்து புரளுவேன்?' என்று அலறினான். இந்திரன் இதைக்கேட்டு அவனிடம் வந்து "என்னடா, நீ இவ்வாறு துக்கிக்கிறாய்?" என்று கேட்டான். அதற்கு அவன் தன் துக்கத்துக்குக் காரணத்தை எடுத்துச் சொன்னான். அதைக் கேட்டு இந்திரன் "நீ இந்த துக்கத்திலிருந்து தப்புவதற்கு ஒரே வழி இருக்கிறது. நீ பஞ்சாக்ஷர மந்திரத்தை ஸதா ஜபம்செய்துகொண்டு சங்கரனைச் சரணமடை; அப்பொழுது உன் பாவம் நசித்து, நீ புண்ணியசாலி ஆவாய். அப்பொழுது நீ ஸ்வர்க்கத்திலிருந்துதவறிப்பூலோகத்தில் போகமாட்டாய். உனக்குப் பன்றி வயிற்றில் பிறப்பும் ஏற்படாது" என்றான் சுப்பிரபன் அவ்வாறே செய்வதாகச்சொல்லி பஞ்சாக்ஷரத்தை ஜபம் செய்து, சங்கரனைச் சரணமடைந்து, ஆறுநாள் சிவனிடத்தில் ஏகாக்கிரசித்தனாய் ஆராதித்தான்,பிறகுஅவன் சிவனருளால் பூலோகதில் வந்து பிறக்காது ஸ்வர்க்கலோகத்துக்கு மேலாகிய உலகம் சென்றான். இந்திரன் இதைக்கண்டு மகிழ்ந்தான். சுப்பிரபன் தனக்கு நேரிடப்போகும் தீங்கை நினைத்து அலறியது போல நானும் அரசனுக்கு நேரிடப்போகும் மரணத்தை யறிந்து துக்கிக்கிறேன்" என்றாள்.

இதைக்கேட்டுஜெயவீரன். "தாயே! இந்திரன் வார்த்தையைக் கேட்டு சுப்பிரபன் எவ்வாறு மரணத்திலிருந்து தப்பினானோ, அவ்வாறு அரசன் மரணத்திலிருந்து தப்புவதற்கு ஏதேனும் உபாயமிருந்தால் தெரிவிக்க வேண்டுகிறேன்" என்றான்.

ஜெயவீரன் சொல்லைக் கேட்டுப் பூமி தேவியானவள் "இவ்விஷயத்தில் ஒரே ஒரு உபாயமிருக்கிறது. அது உன்னால்தான் சாத்தியம்" என்றாள். இதைக் கேட்டு பலசாலியாகிய பிராமணன் "தேவி! எனக்கு அந்த உபாயத்தை உடனே சொல்லுங்கள்; அது என் பிராணனைக் கொண்டாகிலும்,

என் மனைவி மக்களைக்கொண்டாகிலும், ஆகக் கூடியதாயிருந்தால், அதனால் என் எஜமானனுக்கு க்ஷேமமுண்டாகுமானால், நான் என் பிறப்பு ஸபலமானதாக நினைப்பேன்" என்றான். இதைக்கேட்டு பூமிதேவி "அரண்மனைக்கருகில் ஒரு காளி கோவில் இருக்கிறதல்லவா? அக்காளி தேவிக்கு சத்வவரன் என்னும் உனது புதல்வனைப் பலியாகக் கொடுத்தால் அரசன் உயிரோடிருப்பான். இதைத்தவிர அரசன் பிழைத்திருப்பதற்கு வேறு வழி கிடையாது" என்றாள். உடனே ஜயவீரன் "தாயே! நான் விடைப்பெற்றுக் கொள்ளுகிறேன். இப்பொழுதே அவ்வாறே செய்கிறேன்" என்றான். அதற்கு பூமிதேவியானவள் "உன்னைப்போல எஜமானனுடைய க்ஷேமத்தை நாடுகிறவர்கள் வேறு யாருண்டு? உனக்கு க்ஷேமமுண்டாகட்டும்" என்று வாழ்த்திப் பேசிக்கொண்டிருக்கையிலேயே மறைந்துபோனாள்.

அப்பால் ஜெயவீரன் வெகு வேகமாய் வீட்டுக்குப்போனான். அரசனும் ரகஸ்யமாய் அவனைப் பின் தொடர்ந்தான். ஜெயவீரன் வீட்டுக்குள் நுழைந்து தன் மனைவி காந்திமதியை எழுப்பி, "பூமிதேவி சொல்லுகிறபடி அரசனுக்காக நம்முடைய புத்திரனைச் சண்டிகாதேவிக்கு அர்ப்பணம் செய்ய வேண்டும்" என்றான். அதற்கு அவள் "அவசியம் அரசனுடைய க்ஷேமத்தைத்தேடவேண்டியது நமது கடமையாகும். தாங்கள் இப்பொழுதே புத்திரனை எழுப்பி அரசனுக்கு க்ஷேமமுண்டாகும் வார்த்தையை அவனுக்குச்சொல்லுங்கள்" என்று கூறினாள். ஜெயவீரன் உடனே தன் குமாரன் ஸத்வவரனை எழுப்பி, பூமிதேவி சொன்னவார்த்தையை ஆதிமுதல் பலிதானம் வரையில்ச் சொன்னான். அதைக்கேட்டுப்பெயருக்குத்தக்க குணம்பொருந்திய ஸத்வவரன், "அப்பா என் பிராணன் ராஜாவிஷயத்தில் உபயோகப்பட்டால்

நான் புண்ணியசாலியல்லவா? நான் உண்ட உணவுக்கு நான் பிரதி செய்து சுத்தனாகவேண்டும். ஆகையால் என்னைத்தேவி யிடம் கொண்டுபோய், அரசன் நெடுநாளிருப்பதற்காக என்னை தேவிக்குப் பலி கொடுத்துவிடுங்கள்" எனப் பகன்றான். ஜெயவீரன் ஸத்வவரனைக் கட்டியணைத்து 'நீ உண்மையில் என் வயிற்றில் பிறந்தவன்தான்' என்று கூறி மெச்சினான். ஜெயவீரனைப் பின்பற்றிவந்த அரசன் உள்ளே நடக்கும் சம்பாஷணையைக்கேட்டு, "இக்குடும்பத்தார் யாவரும் சமானமான பராக்கிரமசாலிகள்" என்றுமனதில் மெச்சிக்கொண்டான். பிறகு ஜெயவீரன் தன் பிள்ளையைத் தன்தோளின் பேரிலும், காந்திமதி தன் பெண்ணைத் தன் தோளின்பேரிலுமாகத் தூக்கிக்கொண்டு இருவரும்இரவிலேயேசண்டிகையின் ஆலயத்திற்குச் சென்றார்கள். கோயிலை யடைந்ததும் ஜெயவீரன் தன் மகனைத் தோளிலிருந்து கீழே இறக்கினான். ஸத்வவரன் பார்வைக்குக்குழந்தையானாலும் உண்மையில்தைரியநிதியாகையால் அவன் தேவிக்கு நமஸ்காரம் செய்து, "தேவியே! என் மஸ்தக பலியால் மன்னவன் தீர்க்காயுஸாயிருக்க வேண்டும்; ராஜாதிராஜனாகிய விக்கிரமகேது இவ்வுலகில் பகையாளியின்றி இவ்விராஜ்யத்தை பல்லாண்டு ஆளவேண்டும்" என்று சொன்னான். உடனே ஜெயவீரன் "நல்லது, குழந்தாய்!" என்று சொல்லி உறையிலிருந்து கத்தியை யுருவி தன் மகன் தலையை ஒரே வெட்டாய் வெட்டிக் காளியிடத்தில் எடுத்துவைத்து "தாயே அரசனுக்கு க்ஷேமமுண்டாக்க வேண்டும்" என்றான் அப்பொழுது ஆகாசவாணியானது, "ஜெயவீரா! நன்று நன்று! நீ புத்திரன் பிராணனைக் கொடுத்து அரசனுக்கு உயிர்ப் பிச்சை போட்டாயே; இது வெகு நல்ல காரியம்." என்று கூறிற்று. இதைக்கேட்டு வெளியில் நின்றுகொண்டிருந்த அரசன் நடுங்கிப்போனான். இதற்குள்

ஜெயவீரன் பெண்ணாகிய வீரவதி,இறந்துபோன தன் சகோதரன் தலையை எடுத்துக் கட்டியணைத்து முத்தமிட்டு "ஏ அண்ணா!" என்று ஒரு கூச்சல் போட்டு மார்பு வெடித்து இறந்து போனாள். ஜெயவீரன் மனைவியாகிய காந்திமதி தன்னிரு குழந்தைகளும் இறந்ததைப் பார்த்து சோகத்தால் வெந்து,தன்னிருகைகளையும் கூப்பி,வெகு வணக்கமாய் ஜெயவீரனைப்பார்த்து "பிராணநாதா! தாங்கள் வேந்தனுக்கு நன்மைசெய்தீர்கள்; இவ்விரண்டு குழந்தைகளையும் வைத்தெரிக்கும் நெருப்பில் நானும் விழுந்து இறந்துபோக எனக்கு அனுமதி கொடுக்கவேணும். ஒன்றுமறியாத என் பெண், தமையன் இறந்ததைப் பொறுக்க முடியாமல் இறந்தாள். என் இரண்டு குழந்தைகளும் இறந்தபிறகு நான் இருந்து என்ன ஆகவேணும்?" என்றாள். தன்னால் இவ்வாறு துக்க சமுத்திரத்தில்முழுகிய தன் மனைவி சொல்வதைக் கேட்டு ஜெயவீரன் "என் கண்ணாட்டியே! இவ்விஷயத்தில் நான் என்ன சொல்வேன்? உன் மனதுக்குப் பிடித்தபடி நீ செய். உன் குழந்தைகள் இறந்தமையால் உனக்குத் துக்க முண்டாகி யிருப்பதும் கிரமந்தான். எனக்கு இனி உலகவாழ்வில் சுகம் கிடையாதென்பதும் உண்மைதான். நான் உனக்காக ஒரு சிதை செய்து தீ வளர்த்துத் தருகிறேன். சற்று இரு" என்று சொல்லி,அங்கேயிருந்த சில கட்டைகளை எடுத்துத்தன் குழந்தைகளுக்காகத் தான் செய்திருந்த சிதையில்போட்டு தீ வளர்த்துக் கொடுத்தான். பிறகு காந்திமதி, தன் கணவன் காலில் விழுந்து நமஸ்கரித்து, "பிராணநாதா! மறுபிறப்பிலும் தாங்கள் எனக்கு நாயகனாக வேணும். ராஜாவுக்கு க்ஷேமமுண்டாக வேணும்" என்று சொல்லி, கொழுந்து விட்டெரியும் அக்கினியில் விழுந்து இறந்தாள். இத்துடன் காளிக்கு மூன்று பலிகள் ஆயின. இவற்றையெல்லாம் பார்த்த பார்த்திபன்,

"இவர்களுக்கு நான் என்ன பிரத்யுபகாரம் செய்து இவர்கள் கடனைத்தீர்த்துக்கொள்வேன்?" என்று நினைத்து,பிரமைதட்டிப்போய் நின்றான். நாம் எதற்காக இங்கே வந்திருக்கிறோமென்பதையே மறந்துபோனான்.

பிறகு ஜெயவீரன் பின்வருமாறு யோசிக்கலானான்:— "நாம் நம்முடைய எஜமானன் காரியத்தைச்சரிபாய்நிறைவேற்றிவிட்டோம். அதையும் ஆகாசவாணி ஒப்புக்கொண்டுவிட்டது. நாம் உண்ட அரசனுடைய அன்னத்திற்குப் பிரதியாக மனைவி, மக்களைப் பலிகொடுத்துக் கடனைத்தீர்த்துவிட்டோம். இனி நம்முடைய தேகத்தை மாத்திரம் வளர்ப்பதற்காகப் பிராணனை வைத்துக்கொண்டிருப்பது சிலாக்கியமன்று. ஆகையால் நான் என் ஜீவனையும் பலியாகக்கொடுத்து என் அம்மனைப் பூஜிக்கக்கூடாது?" அவன் இவ்விதம் தீர்மானித்து காளிகாதேவியைப் பலவாறாகத் துதித்துத் தன் தலையை வெட்டிக்கொள்ளப்போனான். அப்பொழுது ஆகாசவாணியானது "என்னப்பனே! ஜெயவீரா! அவசரப்படவேண்டாம். நான் உன் பாராக்கிரமத்தையும், தைரியத்தையும் ஸ்வாமி பக்தியையும்கண்டு சந்தோஷப்படுகிறேன். உனக்கு வேண்டிய வரத்தைக்கேள், தருகிறேன்" என்று சொல்லிற்று. அதைக் கேட்டு ஜெயவீரன் "தேவியே! தங்களுக்கு என்பேரில் கிருபையிருந்தால் என் தலைவனாகிய விக்கிரமகேது இன்னும் நூறு வருஷங்கள் ஆயுஸோடு இருக்கவேண்டும். எனது மனைவியும் மக்களும் எழுந்திருக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டான். ஆகாசவாணி "அப்படியே ஆகட்டும்" என்று பதில் கொடுத்தது. உடனே ஸத்வவரன், வீரவதி, காந்திமதி மூவரும் உயிருடன் எழுந்திருந்தார்கள். அவர்கள் சரீரத்தில் காயமாவது வடுவாவது இல்லை. பின்பு ஜெயவீரன் அவர்களுக்கு தேவி அநுக்கிரகித்தருளின செய்திசொல்லி, அவர்களை

வீட்டிற்குக் கொண்டுபோய்விட்டான். பின்னர் அவன் அரச மாளிகை வாசற்படியில்போய் நின்றுகொண்டு வழக்கம்போல் காவல் காற்கத் தொடங்கினன்.

விக்கிரமகேது மன்னன் இவைகளெல்லாவற்றையும் பார்த்துப் பரம சந்தோஷமும் ஆச்சர்யமுமடைந்து, ஒருவருமறியாதபடி தனது அரண்மனைக்குள்போய் தன் உப்பரிகையின் மேலேரி பஞ்சணையில் படுத்துக்கொண்டான். பின்பு அவன் எழுந்திருந்து "இப்பொழுது யார் அரமனைவாசலில் பாராக் கொடுக்கிறன்?" என்றன். வாசற்படியில் காவல்காத்து நின்ற ஜயவீரன், "வெற்றி வேந்தே! வாசலில் நான் பாராக்கொடுத்துக்கொண்டிருக்கிறேன். தங்கள் கட்டளைப்படி அழுதுகொண்டிருந்த ஸ்திரீயைப்பற்றி விசாரிக்கப்போனேன். அவளிடம் போனதும் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அவள் தேவதையைப்போல எவ்வாறே மறைந்து போனள்" என்றன். நடந்த காரியங்களையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த வேந்தன் இவ்வார்த்தையைக்கேட்டுப் பரம சந்தோஷமும் ஆச்சர்யமுமடைந்து "இஃதென்ன ஆச்சர்யம்! இதைப்போல இதுவரை நடந்ததில்லையே! இவனைப்போல் பெருந்தன்மையுள்ள மனிதனும் கிடையாது. தான் யாவரும் புகழ்ந்து கொண்டாடக்கூடிய காரியத்தைச் செய்தும், அதைப்பற்றிச் சிறிதேனும் சொல்லுகின்றனில்லை. இவனுடைய பெருந்தன்மையைப்பற்றி என்ன சொல்வேன்! சமுத்திரம் மகா ஆழமாகவும், விசாலமாகவும், மகாபலத்தோடு கூடியதாகவுமிருக்கிறது. என்னபுயல் அடித்தாலும் அது ஒடுங்குகிறதில்லை. ஆனல் அதுகூட தைரியத்தில் இவனுக்கு ஈடாகாது. இரவில் எனக்குத் தெரியாமலே மனைவி மக்களை இரைகொடுத்து என் பிராணனை ரக்ஷித்த இம்மனிதனுக்கு நாம் என்னபதில் செய்கிறது?" என்று இவ்வாறு அரசன்யோசனை செய்துகொ

ண்டு மெத்தையைவிட்டுக் கீழே யிறங்கி, அந்தப்புரத்துக்குச் சென்று, ஆச்சர்யத்தை நினைத்து நினைத்து இரவைப் போக்கினான். பொழுதுவிடிந்து சபை கூடினவுடன் ஜயவீரன் அவ்விடம் வந்தான். அவன் இரவில் நடந்த விர்த்தாந்தத்தை எல்லோருக்கும் ஜயவீரனை வைத்துக்கொண்டு சவிஸ்தாரமாய்ச் சொன்னான். உடனே யாவரும் ஜயவீரனைப் புகழ்ந்து கொண்டாடத் தொடங்கினார்கள். பிறகு அரசனும் சந்தோஷத்தால் பூரித்து, ஜயவீரனுக்குப் பல கிராமங்கள், யானைகள், குதிரைகள், இரத்தினங்கள், மோகராக்கள் முதலியவற்றைக்கொடுத்து அவன் குடும்பத்தைத் தன் குடும்பத்துக்குச் சமானமாக்கித தன் நன்றியறிதலைக் காட்டினான்.

சுபம்.

1. லளிதா அல்லது பொறுத்தார் பூமியாள்வார். நீதி நிறைந்துள்ள சிறிய கதை. துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டு பல பாடசாலைகளில் உபயோகிக்கப்பட்டுள்ளது. விலை அணா 4.

2. மூன்று சகோதரர்கள் அல்லது உழைப்பின் சிறப்பு. துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது. விலை அணா 4.

3. ஷராப்கான் அல்லது குடியினால் வரும் கேடு. துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது. விலை அணா 3.

## கதை—4.

"எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானா
மாணு செய்யாமை தலை."

முன் ஒரு காலத்தில் பாடலிபுரம் என்னும் நகரத்தில் வீரவரன் என்று ஒரு அரசனிருந்தான். அவனுக்கு தேவ தாஸன், ஸ்ரீதத்தன், ஸுந்தரகன் என மூன்று புதல்வர்கள் இருந்தனர். ஒரு சமயம் மூத்தகுமாரர்களிருவரும் வேட்டை யாடுவதில் விருப்பங்கொண்டு ஒரு நாள் காட்டுக்குப் போனூர் கள். போனவர்கள் அங்கேயே விநோதமாய்த் திரிந்துகொண் டிருந்தார்கள். மீண்டும் நகரத்திற்கு வரவேயில்லை. அவர் கள் போனவழி தெரியாமற் போகவே, ஸுந்தரகன் அவ னைத் தேடிக்கொண்டு காட்டிற்குச் சென்றான். இதற்குள் மூத்தவர்களிருவரும் நாகரீக நடத்தைகளையெல்லாம் விட்டு விட்டுக் காட்டு மனிதர்களோடு சேர்ந்து காட்டிலேயே குடிகொண்டிருந்தனர். அவர்களைத் தேடிக்கொண்டுபோன ஸுந்தரகன் கஷ்டப்பட்டு அவர்களைக் கண்டுபிடித்தான். ஸுந்தரகனைப் பார்த்தும், அவனுடைய சகோதரர்கள் இருவரும் அவனுடைய நாகரீகமான நடவடிக்கைகளைக்கண்டு அவனை மிகவும் பரிகாசஞ் செய்யத் தொடங்கினூர்கள். ஸுந்தரகனோ தமையன்மார்களை வணங்கி நகரத்திற்குத் திரும்பி வரும்படி நயமாய் வேண்டியழைத்தான். என்ன வேண்டியும் அதைக்கேளாமல் அவர்கள் தங்கள் மனம் போன படியே போய்க்கொண்டிருந்தனர். எங்கே போகிறூர்களோ பார்ப்போமென்று ஸுந்தரகனும் அவர்களைப் பின்தொடர்ந் தான்.

மூத்த குமாரர்கள் இருவரும் வழியில் ஒரு எறும் புப் புற்றைக் கண்டு, எறும்புகள் தம்மைக் கண்டு பயந்து நாலாபக்கமும் ஓடும் விதத்தைக்கண்டு களிக்க வெண்ணி, அப்

புற்றை இடிக்க முயன்றார்கள். அதை யறிந்து ஸுந்தரகன், "ஐயோ! பாவம்! இப்பூச்சியை வருத்தி நமக்காவதென்ன? நமது வழியே நாம் போவோம்" என்று சொல்லி அவர்களைத் தடுத்தான். அவர்களும் அதை அங்கீகரித்து அப்புறம்போனார்கள். அங்கிருந்து சிறிதுதூரம் போகையில் மார்க்கத்தில் ஒரு ஏரியில் பல வாத்துக்கள் நீந்தி விளையாடிக் கொண்டிருந்தன. மூத்தவர்களிருவரும் அவற்றைக் கண்டு அவைகளுள் இரண்டைப் பிடித்துக் கொல்லத் தொடங்கினர். அதைக் கண்டு ஸுந்தரகன், 'இவைகளைப் பிடித்து நாம் கொல்லவேண்டாம். தண்ணீரில் விநோதமாய் நீந்தி விளையாடுகின்ற இவைகளை நாம் பிடித்து வதைப்பானேன்?" என்று சொல்லித் தடுத்தான். அதற்கும் அவர்கள் அப்படியே சம்மதித்து அங்கிருந்து அப்புறம் போனார்கள். போகும்பொழுது வழியில் பெரிய தேன் கூடு ஒன்று காணப்பட்டது. அதைக் கண்டு மூத்தவர்களிருவரும் ஈக்களை யெல்லாம் கொன்று விட்டுத் தேனைக் குடிப்பதாக மரத்தின் கீழே உட்கார்ந்தனர். ஸுந்தரகன் இதைக்கண்டு "ஐயோ! இந்த எளிய ஈக்கள் இவ்வளவு தேன் சேர்ப்பதற்கு எவ்வளவு நாள் வருந்தினவோ? இது நமக்கு வேண்டாம். ஒருவர் தேடிய பொருளை மற்றொருவர் அபகரிப்பது நியாயமன்று" என்று அவர்களுக்கு நல்ல வார்த்தையாய்ச் சொல்லி அத்தேனீக்களையும் தப்புவித்தான்.

அங்கிருந்து மூவரும் ஒரு பெரிய மாளிகை போய்ச் சேர்ந்தனர். அதில் எங்கே பார்த்தாலும் கற்குதிரைகளும் கல் யானைகளுமாய்ப் பல கற்கள் காணப்பட்டனவே யன்றி மனிதனொருவரும் தென்படவில்லை. அம்மூவரும் எங்கும் சுற்றிப்பார்த்துக் கடைசியில் ஒரு மண்டபம் வந்து சேர்ந்தார்கள். அங்கே இரண்டு மூன்று பூட்டுப் பூட்டிய

அறையொன்று தென்பட்டது. அதன் கதவிலிருந்த ஒரு சிறு துவாரத்தினுல் அவர்கள் உள்ளே எட்டிப்பார்க்கவே, அங்கே ஒரு மனிதன் உட்கார்ந்திருந்தான். உடனே அவர்கள் அவனை இரண்டு மூன்று தடவை அழைத்தார்கள். அவன் உட்கார்ந்த விடத்தை விட்டு அசையவேயில்லை. மூன்ருந் தடவை கூவினதைக் கேட்டு அவன் எழுந்து வந்து கதவைத் திறந்து, அவர்களை உள்ளே அழைத்துக்கொண்டுபோய் அவர்களுக்குப் பலவிதமாய் உபசாரஞ்செய்து விருந்தளித்து ஒரு சிறந்த படுக்கையில் படுக்கச் செய்தான்.

மறுநாட்காலையில் அம்மூவரும் எழுந்து அம்மனிதனைப் பார்த்து "ஐயா! இவ்விடமெங்கும் கற்கள் தவிர மற்றென்றும் காணப்படவில்லையே! இதின் காரணமென்ன?" என வினவினர். அதற்கு அம்மனிதன் அவர்களை அழைத்துக் கொண்டுபோய் சமீபத்திலிருந்த ஒரு கல்வெட்டைக் காட்டினான். அதில் மூன்று செய்திகள் எழுதியிருந்தன. முதலாவது அடுத்த காட்டிலுள்ள புற்றரையில் ஒரு ராஜகன்னிகையின் ஆயிரம் முத்துக்கள் விழுந்து கிடக்கின்றன. அவற்றைக் கண்டெடுத்துக் கொண்டு கொடுப்பவனையே அந்த ராஜகுமாரத்தி மணஞ்செய்து கொள்ளத் தீர்மானித்திருக்கிருள். அவற்றைத் தேடப்போகிறவன் பொழுதுபோவதற்கு முன்னமே ஆயிரம் முத்துக்களையும் பொறுக்கிக் கொண்டுவரவேண்டும். ஒரு முத்துக் குறைந்தாலும் அவற்றைத் தேடப்போனவன் உடனே கல்லாய் மாறிப் போவான். என்றிருந்தது. அதைப் பார்த்து மூத்த குமாரன் நான் இக்காரியத்தை முடித்துக் கொண்டு வருவேன்" என்று சொல்லிப் போய் பொழுது போவதற்குள் நூறே நூறு முத்துக்கள் பொறுக்கிப் பொழுது போனவுடன் கல்லாய்ப் போய்விட்டான். மூத்தவன் திரும்பி வாராமற் போகவே, மறுநாள் ஸ்ரீதத்தன் "நான் போய்

இதைச் சாதித்து வருவேன்" என்று போனான். அவனும் இருநூறு முத்துகளுக்குமெல் பொறுக்கமாட்டாமல் தமையனைப் போலவே கல்லாய் மாறிவிட்டான்.

இப்பொழுது ஸௌந்தரகனே போக வேண்டியதாயிற்று அவன் அப்புற்றரையில் போய்ப் பார்த்து இந்த ஆயிரம் முத்துக்களையும் எவ்வாறு பொறுக்கியெடுப்பதென்று திகிலடைந்து புலம்பத் தொடங்கினான். அதைக் கேட்டு முன்பு இவனால் பிழைப்பு மூட்டப்பட்ட எறும்புகள் பல வந்து ஒரே நிமஷத்தில் ஆயிரம் முத்துகளையும் பொறுக்கிக் கும்பலாய்ச் சேர்த்தன. அதை அவன் எடுத்துவந்தான்.

இந்தக் கல்வெட்டில் எழுதியிருந்த இரண்டாவது செய்தியாவது அந்த ராஜ கன்னிகை படுத்திருக்கும் அறையின் திறவு கோலை வரும்போது வழியிலே கண்ட ஏரியிலிருந்து எடுத்துக்கொண்டு வரவேண்டும் என்றிருந்தது. அது கண்டு ஸௌந்தரகன் அவ்வேரிக்குச் சென்றான். அங்கேபோய் திறவு கோலை எடுக்க வழி தெரியாமல் தவித்தான். பிறகு முன்பு இவனால் உயிர்மீட்கப்பட்ட வாத்துகள் உடனே தண்ணீரில் மூழ்கி அந்தத்திறவு கோலைத் தேடிக்கொண்டு வந்து கொடுத்தன.

அக்கல்வெட்டில் எழுதியிருந்த மூன்றுவது செய்தியை நிறைவேற்றுவது மிகக் கடினமாயிருந்தது. அது என்னவென்றால், அழகிலும் உருவத்திலும், நிறத்திலும், உடையிலும் ஒத்தவர்களான மூன்று ராஜ கன்னிகைகளுள் மிகவும் ரூபவதியான கடைசிப் பெண்ணைக் கண்டறியவேண்டும் என்றிருந்தது. ஸௌந்தரகன் திறவு கோலைக்கொண்டு ராஜ கன்னிகைகளிருக்கும் அறையைத் திறந்து பார்த்தபொழுது அம் மூவரும் தூங்கிக் கொண்டிருந்தனர். அவர்களுக்குள் ஒரு விதமான பேதமும் காணப்படவில்லை. அவர்கள் படுப்பதற்கு

முன் மூத்தவள் ஒரு கட்டி கற்கண்டும், நடுப்பெண் கொஞ்சம் பாலும், கடைப்பெண் கொஞ்சம் தேனும் புசித்துவிட்டுப் படுத்தார்கள் என்று மாத்திரம் எழுதியிருந்தது. அதைக்கண்டறிய மாட்டாமல் அவன் திகைத்தான். அப்பொழுது முன்பு இவனால் காப்பாற்றப்பட்ட தேனீக்களுள் தலைமையான ஈ ஒன்று அங்குவந்து முதலிரண்டு பெண்களின் வாயையும் மோர்ந்து பார்த்துக் கடைசியில் தேனுண்ட கடைசிப் பெண்ணின் வாயில் வந்து உட்கார்ந்தது. அதனால் ஸுந்தரகன் கடைக்குமாரத்தி அவள்தானென்று அறிந்துகொண்டான். உடனே அவர்களைப் பிடித்திருந்த மாயை நீங்கிவிட்டது. அம்மூவரும் நித்திரைவிட்டு நீங்கினார்கள். அவ்விடத்தில் கல்லாய் மாறியிருந்தவர்கள் எல்லோரும் உடனே தூங்கி எழுந்தவர்கள் போல இயற்கை வடிவத்தோடு எழுந்தனர். இவ்வதிசயத்தைக்கண்டு ஸுந்தரகன் அதன் விவரம் யாதென்று விசாரிக்கவே, அவையெல்லாம் ஒரு மாயாவின் செய்கை யென்றறிந்துகொண்டு தான் வெற்றி பெற்றமையால் மிகவும் உவப்படைந்தான். பிறகு அம்மூவரும் முறையே மூன்று கன்னிகைகளையும் மணந்துகொண்டு தமது நகரஞ்சென்று இன்பமாய் வெகு காலம் வாழ்ந்து வந்தனர்.

சுபம்.

ஸத்ய ஹரிச்சந்திரன் ஸம்ஸ்கிருதத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட நாடகம். விலை அணா 6.

"பெற்றோரும் பிள்ளைகளும்" ஓர் சிறந்த வியாஸம். துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டவை. விலை அணா 1.

## கதை—5.

"செறிவறிந்து சீர்மை பயக்குமறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின்."

முன்னொருகாலத்தில் இவ்வவனியின்கண் லக்ஷதத்தன் என்னுமொரு அரசன் அரசுபுரிந்து வந்தனன். இவன் மிகச் செல்வம் படைத்தவன். அவனுக்குத் தன்னிடம் யாசிப் போர்க்கு லக்ஷம் பொன்னுக்குக் குறைந்து கொடுப்பதே தெரியாது. எவருடனேனும் அவன் சிறிதுநேரம் வார்த்தை யாடினல் அவனுக்கு ஐந்து லக்ஷம் கொடுப்பான். அவன் வறு மையாளர்களின் வறுமைக்கு வறுமையைச் செய்துவந்தான். இதனுல் லக்ஷதத்தன் என்னும் அவனுடைய பெயர் பிரசித்தி யடைந்திருந்தது. அவ்வரசனுடைய மாளிகையின் வாசலில் க்ஷமாதத்தன் என்பவன் அல்லும் பகலும் உட்கார்ந்திருப் பான். அவனது ஆஸ்தி அவன் இடுப்பில் கட்டிக்கொண்டி ருந்த ஒரு கந்தைத்துணி மாத்திரமே. அவன் தலையில் சடை விழுந்திருந்தது. அவன் கோடைகாலத்திலும் மாரிகாலத்தி லும் அவ்வரண்மனை வாசலைவிட்டு நகருவதில்லை. அரசன் க்ஷமாதத்தன் அரண்மனை வாசலைக் காத்திருப்பதைப் பார்த் துக்கொண்டே போவான் க்ஷமாதத்தன் அவ்வரண்மனை வாசலில் காத்திருந்து மிகக் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தான். அரசன் தயாளுவாயிருந்தும் கொடையாளியாயிருந்தும் க்ஷமா தத்தனுக்கு யாதொன்றும் கொடுக்கவில்லை.

ஒருநாள் அரசன் வேட்டையாடக் காட்டுக்குச் சென்ற பொழுது அவனைத் தொடர்ந்து கையில் ஒரு தடியை யெடுத் துக்கொண்டு க்ஷமாதத்தன் போனன். வனத்தில் மன்ன வன் கையில் வில்லேந்தி வாகனத்தின்மீது அமர்ந்தான். அவ னைச் சுற்றிலும் சேனையுமிருந்தது. அரசன் அம்புமாரி

பொழிந்து புலி, காட்டுப்பன்றி, மான் முதலியவைகளைக் கொன்று கொண்டிருந்தான். அப்பொழுதும் கால் நடையி லிருந்த க்ஷமாதத்தன் அவ்வரசனுக்கு முன்பாகத் தனியாய்த் தன் தடியால் பல மிருகங்களைக் கொன்றுகொண்டிருந்தான். அரசன் இதனைப்பார்த்து "இவன் மிகவும் பராக்கிரமசாலியா யிருக்கிறான்" என மனதில் மெச்சிக்கொண்டான். இவ்வா றிருந்தும் இறைவன் அவனுக்கு யாதொன்றும் கொடுக்க வில்லை. அரசன் வேட்டையாடிக் களைத்தபின் விடாயாற்றிக் கொள்ளத் தன் நகரமடைந்தான். க்ஷமாதத்தன் மீண்டும் முன்போலவே அவ்வரசன் மாளிகை வாசலில் உட்கார்ந்திருந் தான

பின்பு ஒருநாள் லக்ஷதத்த மன்னவன் தனது தேசத் தின்மீது படையெடுத்து வந்திருந்த பகைவனை எதிர்த்து முறியடிக்கச் சென்றான். அவ்விடம் ஒரு பெரும் போர் நடந்தது. அந்த யுத்தத்தில் க்ஷமாதத்தன் அரசன் முன் னிலையில் தன் கருங்காலித் தடியால் பல பகைவர்களைக் கொன்று சௌரியத்தைக் காட்டினான். அரசன் தன் சத்து ருக்களைத் தோற்கடித்துத் தன் நகருக்குத் திரும்பினான். ஆனால் க்ஷமாதத்தன் பராக்கிரமத்தைப் பார்த்தும் அவனுக்கு ஒன்றும் கொடுக்கவில்லை. இவ்வாறு க்ஷமாதத்தன் கஷ்டப் பட்டுக்கொண்டு ஐந்து வருஷங்களைப் போக்கினான்.

ஆறாவது வருஷம் பிறந்தபிறகு ஒருநாள் வேந்தன் க்ஷமாதத்தனைப் பார்க்கையில் மன்னனுக்கு தயையுண்டாகி "இவ்வளவு காலமாய் வருத்தப்படுகிறான்; நாமிவனுக்கு ஒன் றுங் கொடுக்கவில்லை; ஆகையால் இவனுக்குத் தெரியாதபடி இவனுக்கேதாவது கொடுத்துப் பார்ப்போம். இந்த நிர்ப் பாக்கியனுடைய பாவம் இன்னும் அற்றுப்போய்விட்டதோ இல்லையோ வென்பதையும், இலக்ஷ்மி கடாக்ஷம் இவனிடம்

உண்டாயிருக்கிறதோ இல்லையோ வென்பதையும் பார்த்து விடலாம்" என்று ஆலோசித்தான். பின் தன் பொக்கிஷத்தில் நுழைந்து ஒரு கொடி யெலுமிச்சம் பழத்தை யெடுத்து அதை இரண்டாய்ப் பிளந்து, அதில் இரத்னங்களை நிரப்பி ஒரு ஸம்புடம்போலச் செய்தான். பின்பு மன்னவன் தன் ஆஸ்தான மண்டபத்திற்கு வெளியில் சபை கூட்டிக் கொலுவிருந்தான். அதற்கு அந்நகரத்து ஜனங்கள், கப்பம் கட்டும் சிற்றரசர்கள், அமைச்சர்கள் முதலிய யாவரும் வந்தனர். அவர்களுடன் க்ஷமாதத்தனும் வந்து சேர்ந்தான். அப்பொழுது அரசன் அன்புடன் "ஏ க்ஷமாதத்தா? இங்கே வா" வென்று கூப்பிட்டான். அவன் அரசன் தன்னை யழைத்தது கேட்டு மகிழ்வுற்று அரசனுக்கு எதிரில் நின்றான். அரசன் அவனை "அடே க்ஷமாதத்தா? நீயாக ஒரு சுலோகத்தை இயற்றிச் சொல்" என்று கட்டளை யிட்டான்; அதைக் கேட்டு க்ஷமாதத்தன் அடியிற்கண்ட பொருளுள்ள ஒரு சுலோகத்தைக் கூறினன் :—நதிகள் யாவும் நிறைந்திருக்கும் கடலை யடைந்து நிரப்புகின்றன; வறண்டு கிடக்கும் குளங் குட்டைகளை நிரப்புகிறதில்லை. அம் மாதிரியாகவே இலட்சுமி தேவியானவள் செல்வமுள்ளவர்களுக்கு மேலும் மேலும் கொடுக்கின்றாள்; நிற்பாக்கியனு யிருப்பவன் கண்ணில் படுவதில்லை.

அரசன் மேற்கண்ட கருத்துள்ள சுலோகத்தைக் கேட்டுச் சந்தோஷமடைந்து விலையுயர்ந்த இரத்னங்கள் நிறைந்த அவ்வெலுமிச்சம் பழத்தை அவனுக்குப் பரிசாகக் கொடுத்தான். அச்சமயத்தில் அச்சபைக்கு வந்துள்ளோர் மர்ம மறியாராகையால் ஒருவரைப் பார்த்து ஒருவர் "இந்த க்ஷமாதத்தன் எவ்வளவு நிர்பாக்கியனு யிருக்கின்றான். மன்னவனுக்கு யாரிடம் கிருபை யுண்டாகின்றதோ அவர்களின்

வறுமைக்கு வறுமை வந்துவிடுமே? இப்பொழுதே இந்த ஏழையை அழைத்து ஸகல ஜனங்களும் பார்க்கப் பிரியமாய்ப் பேசி முடிவில் ஒரு எலுமிச்சம் பழத்தைக் கொடுத்திருக்கிறார்! உண்மையாகவே யாவருக்கும் இஷ்டத்தைக் கொடுக்கும் கற்பக விருக்ஷமானது அதிருஷ்டஹீனன் போனால் புரசை மரமாகி விடுகிறது'' என்று பேசிக்கொள்ளத் தலைப்பட்டார்கள்.

அந்த க்ஷமாதத்தன் இரத்தனங்கள் நிறைந்த அத் துரிஞ்சிப் பழத்தை பெற்றுக்கொண்டு தூக்கித்துக்கொண்டு வெளியே செல்லுகையில் ராஜவந்தி என்னும் புத்த சன்னியாசி எதிரே வந்தான். அவன் துரிஞ்சிப் பழத்தை பார்த்து அது சிறந்ததென்று நினைத்து க்ஷமாதத்தனுக்கு ஒரு துணியைக் கொடுத்து அப்பழத்தை வாங்கிக்கொண்டு அரசனுக்குக் காணிக்கையாகக் கொண்டு கொடுத்தான். அரசன் அது தான் கொடுத்த பழமென்றறிந்து அப்புத்த சன்னியாசியை "உமக்கு இப்பழம் எவ்வாறு கிடைத்தது'' என வினவினான். அதற்கு அப்புத்தசன்னியாசி தனக்கு க்ஷமாதத்தன் கொடுத்தான் என்றார். அரசன் அதைச் கேட்டு வியப்புற்று அந்தோ! அவ்வேழையின் தீவினை இன்னும் நீங்கவில்லையே? எனத் துக்கித்து அதனை எடுத்துக்கொண்டு ஒரு நிமிஷம் கழித்து சபையினின்று எழுந்திருந்து தன் நித்திய கர்மானுஷ்டானஞ் செய்யச் சென்றான். க்ஷமாதத்தன் அத்துணியை விற்று ஆகாரஞ் செய்துவிட்டு எப்பொழுதும்போல அரச மாளிகையின் வாசலில் உட்கார்ந்திருந்தான்.

மறுநாளும் மன்னவன் முதனாளைப் போல ஒரு பெரிய சபை கூட்டினான். நகரத்திலுள்ள ஜனங்கள் யாவரும் அரசனைக் காண வந்தனர். அங்கு க்ஷமாதத்தனும் வந்து சேர்ந்தான். அரசன் க்ஷமாதத்தனைப் பார்த்து முன்போலவனைத்

தன்னருகில் வரவழைத்து, அவனையுட்கார வைத்து, அவன் முன்னர் கூறிய சுலோகத்தை மீண்டும் சொல்லச் சொல்லி சந்தோஷமடைந்து முதல் நாள் கொடுத்ததுபோல உள்ளே இரகசியமாய் இரத்தினங்கள் வைக்கப்பட்ட ஒரு எலுமிச்சம் பழத்தை அவனுக்கு இனுமாக அளித்தான். அதனைப் பார்த்து சபையோர் ஒருவர்க்கொருவர் "இப்பொழுது இராஜசந்தோஷம் வீணாய் விட்டதே? இவன் தரித்திரம் இன்னும் தீரவில்லை" எனப் பேசிக்கொண்டனர். அந்த க்ஷமாதத்தனும் அப்பழத்தைப் பெற்றுக்கொண்டு வெருப்படைந்து "அரசன் இரண்டாந் தடவை கருணை கூர்ந்தும் வீணாகி விட்டது என்று நினைத்துக்கொண்டு வெளியில் போனான். அப்பொழுது அவ்விராஜ்ஜியத்தில் வந்த ஒரு புது உத்தியோகஸ்தன் எதிரே வந்தான். அவன் க்ஷமாதத்தன் கையிலிருந்த பழத்தைப் பார்த்து அதனைத் தனக்குக் கொடுக்கும்படி வேண்டி, ஒரு ஜோடி வஸ்திரம் கொடுத்து அப்பழத்தை விலைக்கு வாங்கி அரசன் அவைக்களத்திற்குச்சென்று எலுமிச்சம் பழத்தைக் காணிக்கையாகக் கொடுத்தான். அரசன் அது தான் கொடுத்த பழமென்றறிந்து அவனை "உனக்கு இப்பழம் ஏது" என வினவினான். அதற்கவன் அது தனக்கு க்ஷமாதத்தனிடமிருந்து கிடைத்ததென்று கூறினான். அதனைக் கேட்டு வேந்தன் "அந்தோ! இலக்ஷுமிக்கு இன்னும் இவனிடம் மனமிரங்கவில்லையே" என்று அலோசித்து மிக்கத் துக்கித்து சபையை விட்டு எழுந்திருந்தான். க்ஷமாதத்தன் வேஷ்டியைக் கடை வீதிக்குக்கொண்டு போய் அங்கு ஒரு துணியைவிற்று ஆகாரஞ் செய்துகொண்டு மற்றொருதுணியை இரண்டாய்க் கிழித்துத் தான் உடுத்திக்கொண்டான்.

திரும்ப மூன்றும் நாளும் அரசன் சபை கூட்டினான். அதற்கு முன்போல நகரத்தாரனைவரும் க்ஷமாதத்தனும்

வந்து சேர்ந்தனர். அரசன் க்ஷமாதத்தனை யழைத்து அவன் முன்னர் கூறிய சுலோகத்தை மீண்டும் சொல்லச் செய்து முன்போல் ஒரு எலுமிச்சம் பழத்தையே கொடுத்தான். இதனைப் பார்த்து யாவரும் ஆச்சரியமடைந்தனர். க்ஷமாதத்தன் அதைப் பெற்றுக்கொண்டு வெளியே போய்த்தன்னெதிரே வந்த ஒரு தாசியிடம் கொடுத்தான். இராஜஸன்மானமாகிய விருக்ஷத்தின் மெல்லிய கிளையைப் போன்ற அவள் க்ஷமாதத்தனுக்குப் பின்னுலுண்டாகப்போகும் பலனுக்கு ஒரு அறிகுறியாக (ஒரு கிளை புஷ்பம் கொடுப்பதுபோல) அவனுக்கு ஒரு பொன் நாணயம் கொடுத்தாள். க்ஷமாதத்தன் அன்றைபதினம் அதை வைத்துக்கொண்டு ஆனந்தமாயிருந்தான். அம்மையல் கொண்ட தையல் அரசனிடம் சென்று பிரியத்துடன் பருந்தும் அழகாயுமிருந்த அப்பழத்தைக் கொடுத்தனள். அரசன் அது தான் கொடுத்த பழமென்றறிந்து அவளை 'அது எவ்விதம் கிடைத்தது' என வினவினன். அதற்கவள் "தனக்கு க்ஷமாதத்தன் கொடுத்தாகக் கூறினுள். இதனைக்கேட்டு அரசன் சிந்தையுற்று "இன்றுங்கூட திருமகள் கடாக்ஷம் அவன் மீது படவில்லையே? அவன் தீவினை இன்னும் அழியவில்லை யாகையால், அவன் நான் கொடுக்கும் பரிசுகளைப் பலனற்றதாக வெண்ணுகின்றுன். அந்தோ! இதற்கு என்ன செய்வது?" எனத் துக்கித்து எலுமிச்சம் பழத்தை ஓரிடம் பத்திரமாய் வைத்துவிட்டு எழுந்து தன் நித்ய கர்மானுஷ்டானங்களைச் செய்யத்தொடங்கினுன்.

மறுபடி நாலாம் நாளும் வேந்தன் முன்போலவே சபை கூட்டினுன். அதனில் சிற்றரசர்கள், அமைச்சர்கள், நகரவாசிகள் முதலியவர்கள் மிகுதியாய் வந்திருந்தமையால் மிக்க நெருக்கமாயிருந்தது. அங்கு க்ஷமாதத்தனும் வந்திருந்தான். அவனை அரசன் அருண்மையில்வரவழைத்து, உட்காரச்செய்து,

முன்போல சுலோகஞ் சொல்லச் சொல்லிக் களிப்படைந்து திரும்ப அதே எலுமிச்சம பழத்தைக் கொடுத்தான். அது க்ஷமாதத்தன் கையில் வந்ததும் தவறிக் கீழே விழுந்து இரண்டு துண்டாயிற்று. உடனே உள்ளே மறைத்து வைக்கப்பட்டிருந்த இரத்தினங்கள் வெளியில் விழுந்து சபாமண்டபத்தைப் பிரகாசிக்கச் செய்தன. இதனைப்பார்த்து ஜனங்கள் "அஹோ! இந்த மர்மம் நமக்குத் தெரியாததால் மூன்று நாள் வீண் பிரமங்கொண்டிருந்தோம். மன்னவன் கருணை இவ்வாறன்றோ இருக்கின்றது" எனப் பேசத் தலைப்பட்டனர். அதனைக் கேட்டுக் கோமன் "இவனுக்கு இலட்சுமி கடாக்ஷமுண்டாயிருக்கின்றதா வென்பதை அறியவே இவ்வாறு பரீட்சை செய்தேன்; மூன்றுநாளாய் இவன் பாபம் தீரவில்லை. இன்றைய தினம் இவன் பாபம் தீர்ந்துவிட்டமையால் இன்று இலக்ஷ்மி அவனுக்குப் பிரஸன்னமாயிருக்கிறாள்" எனக்கூறி அவனுக்கு அவ்விரத்னங்களோடு கிராமங்கள், யானைகள், குதிரைகள் முதலியவைகளைக் கொடுத்து அவனை ஒரு சிற்றரசனாக்கினான். சபையோர்களும் நகரவாசிகளும் மன்னவனை மெச்சிக்கொண்டார்கள். அரசன் க்ஷமாதத்தனுக்கும் சபையோர்க்கும் விடை கொடுத்துவிட்டு தான் தன் மாளிகைக்குச சென்றான்.

சுபம்.

ஷராப்கான் அல்லது குடியினால் வரும் கேடு. "அளவுக்கு மிஞ்சினால் அமிருதமும் விஷம்" என்கிறதை விளக்கிக் காட்டும் சிறிய கதை. விலை அணா 3.

## கதை—6.

முன்னொரு காலத்தில் வைவஸ்வத வம்சத்தில், ஸமுத்திரத்திற் சந்திரன்போலத் திலீபனென்னு மரசன் உண்டானான். அவன் விசாலமான மார்பையும் விருஷபத்தின் திமில் போன்ற தோளையுமுடையவன்; மநுநீதி வழுவாது அரசாண்டு வந்தவன்; பிரஜைகளின் ஹித நிமித்தமே சூரியன் நீரைக் கிரஹிப்பதுபோற் கப்பணம் வாங்கிவந்தவன்; சாஸ்திரங்களிற் பின்வாங்காத புத்தியும் போர்க்களத்திற் முன் நிற்கின்ற திண்மையு முடையவன்; மந்திராலோசனையை மறைவாய்ச்செய்யு மியல்புடையவன்; அறிவிருந்தும் மௌனமாயிருக்குகை, கொடுத்தாலும் புகழ்ந்துகொள்ளாமை முதலிய குணங்கள் ஒருங்குசேரப்பெற்றவன். குற்றஞ்செய்தவர்களைத்தண்டிப்பவன்; குணமுள்ளவர்களைக் கொண்டாடுபவன்; அவனது ராஜ்யத்தில் திருட்டென்பது, திருட்டுப்போய்விட்டது; விரோதியாயிருப்பினும் சிஷ்டனாயிருப்பவன் நோயாளிக்கு மருந்துபோல அவனுக்கு இஷ்டனா யிருந்தான். பிரியனாயிருந்தாலும் துஷ்டனாயிருப்பவன் பாம்பினாற் கடிக்கப்பட்ட விரல்போல், தள்ளத்தக்கவனானான். அவனுக்கு ஸுதக்ஷிணை யென்று பெயருள்ள ஒரு மனைவி யிருந்தாள். அவ்விருவரும் நெடுநாள் இல்லறம் நடத்திவந்தும் புத்திரப் பேரு கிடைக்காமையால் அதற்காகக் குலகுருவாகிய வஸிஷ்டமுனிவர் ஆச்ரமத்திற்குத் திலீபன் மனைவியுடன் சென்றான். அங்கு முனிவர்கள் மன்னவனுக்குத் தக்க மரியாதை செய்தனர். பின்பு திலீபன் மனைவியுடன் வஸிஷ்டர் ஆச்ரமத்திற்குச்சென்று, அருந்ததீ தேவியையும் வஸிஷ்டரையும் ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்தான். பின்னர் வஸிஷ்டர் மனைவியுடன் ஆசிர்வதித்து இராஜ்யத்தின் குசலத்தை வினவினர்

திலீபன் "இராஜ்யம் முழுவதும் தங்கள் பலத்தால் க்ஷேமமா யிருக்கிறது; ஆனால், தமது நாட்டுப்பெண்ணான ஸுதக்ஷிணை யிடம் எனக்கு மக்கள் உண்டாகாமையால், பூமி என்னைத் திருப்தி செய்யவில்லை; எனது பிதிர்க்கள் எனக்குப் பின் கொடுப்பவர் எவருமில்லையென்று நான் கொடுப்பதை மிகுத் துவைப்பதில் முயற்சியுள்ளவர்களாய் நன்றாய்ச் சாப்பிட வில்லை; புத்திரப்பேற்றைப்பெறாத ஒருவன் உயர்ச்சிறப்பை யடைவது முடியாத விஷயம்; ஆனதால், பிதிர்க்களின் கடனாகிய ஸந்ததியை யுண்டுபண்ணுதலை நிறைவேற்ற வழி சொல்ல வேண்டும்" என வேண்டிக்கொண்டான்.

இவ்வாறு தெரிவித்தபின் முனிவர் சற்றுநேரம் தியானம்செய்து ராஜாவைப்பார்த்து 'நீ முன்னொரு சமயம் இந்திரனைச் சேவித்துவிட்டு வரும்போது வழியில் கற்பகமரத்தடியி லிருந்த காமதேனுவைப் பிரதக்ஷிண நமஸ்காரங்களால் மரியாதை செய்யாமல் வந்தமையால் அப்பசு தன்னை அவமானஞ் செய்தமையால் நீ அதின் ஸந்ததியைப் பூஜிக்காமல் மக்கட்பேற்றைப் பெறமாட்டாய் எனச் சபித்தது. அது தேவ கங்கையின் சத்தத்தால் உன் செவியிற்படவில்லை. அதனால் உனது மனோரதம் தடைபட்டிருக்கிறது. இப்பொழுது அது வருணன் வேள்வி நிமித்தம் பாதாளலோகத்திற்குச் சென்றிருக்கிறது. அதன் வழியோ பாம்புகளால் மூடப்பட்டிருக்கிறது. ஆனதால் அதற்குப் பிரதியாக அதன் பெண்ணான நந்தினியை மனைவியுடன் பரிசுத்தனாக ஆராதிக்கவேண்டும்' என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே நந்தினி வந்துவிட்டது. அதனைப்பார்த்து முனிவர் "உனது மனோரதம் சீக்கிரம் கைகூடிவிடும், இப்பசுவை, கல்வியை அப்பியசித்தாற் போல எப்பொழுதும் அநுஸரித்துத் திருப்திசெய்விக்கவே ண்டும்; அது போனால் போகவேண்டும். நின்றால் நிற்கவே

ண்டும்; படுத்தாற் படுக்கவேண்டும்; ஜலங் குடித்தால் ஜலங் குடிக்கவேண்டும்; உனது மனைவியும் பக்தியுடன் தபோவனம் வரையில், காலையிற் பின்தொடர்ந்து மாலையில் எதிர்கொண்டழைக்கவேண்டும். இவ்வாறு அது பிரஸாதஞ் செய்யும்வரை அநுஷ்டிக்கவேண்டும்" என்றார். அரசனும் ஸரியென்றி அங்கிகரித்தான். பின்பு இரவில் அவர் நியமத்துக்குத் தக்க படுக்கையை ஏற்படுத்திக்கொண்டு தூங்கிவிட்டுக் காலையில், திலீபராஜன் கன்றுகுட்டியை ஊட்டவிட்டு கட்டிப் பசுவை அவிழ்த்துவிட்டான்.

மனைவியும் தபோவனம்வரையில் பின் தொடர்ந்தாள். பின்பு திலீபன் இளம்புற்களைப் பிடுங்கிக்கொடுப்பதனுலும், தினவுதீரச்சொறிந்து கொடுப்பதனுலும், ஈக்களை ஓட்டுவதனுலும், அதைக் காப்பதில் முயற்சியுடையவனுனன். திலீபன் அப்பசுவை அதன் நிழல்போல அநுசரித்தான். அவன் செல்லும்பொழுது இருபக்கத்திலுள்ள மரங்களின் மீதுள்ள பறவைகள் சத்தத்தால் கூவி யழைத்தன. லதாகிருஹங்களில் உட்கார்ந்து கொண்டு, பொற்றன் மூங்கில்களிற் புகுந்த காற்றூர் புல்லாங்குழல்போல் வனதேவதைகளாற் கானஞ்செய்யப்பட்ட தனது கீர்த்தியைக் கேட்டான். அந்நந்தினியானது எங்கும் தனது ஸஞ்சாரத்தாற் சுத்தமாகச் செய்துவிட்டு, சாயங்காலத்தில் தன்னிருப்பிடம் செல்லத்தொடங்கிற்று. திலீபன் வனத்தின் வனப்பை பார்த்துக்கொண்டு அதைப் பின்தொடர்ந்தான் திலீபனுல் பின் தொடரப்பட்டதும் ஸுதக்ஷிணையால் எதிர் கொண்டழைக்கப்பட்டதுமான அப்பசு, பகலால்பின்தொடரப்பட்டு, இரவால்எதிர் கொண்டழைக்கப்பட்ட ஸந்தியாகாலம் போல விளங்கிற்று. அப்பொழுது ஸுதக்ஷிணை அப்பசுவைப் பிரதக்ஷணஞ் செய்து, நமஸ்கரித்து உபசரித்தாள். தாம்செய்த

பூஜையை ஏற்றுக்கொண்ட தென்றிருவரும் மகிழ்ந்தனர். திலீபன் வஸிஷ்டருடையவும் அருந்ததி யுடையவும் பாதங்களை வணங்கி, ஸந்தியாகால விதியை முடித்துவிட்டு, படுத்திருக்கும் பசுவை மீண்டும் அடைந்தான். அருகில் வைக்கப்பட்ட உணவுகள், தீபங்கள் இவைகளையுடைய அப்பசுவைத் திலீபன் மனைவியுடன் அநுசரித்து அது தூங்கியபின் தூங்கி காலையில் அது எழுந்திருக்குமுன் எழுந்திருந்தான்.

இவ்வாறு மக்கட் பேறுக்காக விருத மநுஷ்டிக்கும் திலீபனைப் பரீக்ஷிக்கவெண்ணி, அப்பசு, மறுநாள் கங்கைக் கரையில் இளம்புற்களையுடைய ஹிமவத் பர்வதத்தின் குகைக்குள் நுழைந்தது. அப்பசு, மனதாலும் புலி முதலிய துஷ்டப் பிராணிகளாற் பீடிக்க முடியாதென்று திலீபன் மலையின் அழகைப் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது, சிங்கமொன்று அதைப் பிடித்திழுப்பதைப் பார்த்தான். பின்பு அப்பசு தீனமாய்க் கத்துவதைக் கேட்டு, அம்மிருகேந்திரனைக் கொல்வதற்காகப் பாணத்தை அம்புறாத்தூணியினின்று மெடுக்கவிரும்பினான். அவனுடைய வலது கையானது வில்லின் அடியில் பிரவேசித்த பொழுதே சித்திரத்தில் எழுதப்பட்டது போல ஸ்தம்பித்துப்போய் விட்டது. தனது கை இவ்வாறுனமைக்காகக்கோபம் மிகுந்து தனது தேஜஸ்ஸால் தஹிக்கப்பட்டான். அப்பொழுது அச்சிங்கம் மனுஷ்யன் பேசுவதுபோல, திலீபனைப் பார்த்து "ஹேமன்னவ! நீ சிறமப்படவெண்டாம். நீ உனது அஸ்திரத்தைப் பிரயோகஞ் செய்தாலும் வீணேயாகும்; மரத்தை பிடுங்கக் கூடிய மாருதன் வேகமானது பர்வதத்திற் பிரவர்த்திப்பதில்லை. கைலாஸ பர்வதம்போல் வெளுப்பான விருஷபத்தின்மீது ஏறவிரும்பும் சிவபெருமானது அடிவைப்பாற் பரிசுத்தனான என்னைக் கும்போதரனென்று பெய

224874

ருள்ள சிவபெருமானுடைய வேலைக்காரனென்றறி.' இதோ முன்னேயிருக்கும் தேவதாருவிருக்ஷமானது சிவபெருமானுக்குப் புத்திரன் போன்றது. இதில் ஒரு சமயம் காட்டுயானை உறைந்து தோலைப் போக்கிவிட்டது. அதனால் இம்மலைமகள் மிகவும் துக்கித்தாள். அதுமுதற் காட்டுயானைகளைப் பயமுறுத்துவதற்காக இவ்விடம் பரமசிவன் என்னை யிருக்கும்படி ஏவியிருக்கிறார். பசிமிகுந்த எனக்குப் பாரணை செய்வதற்கு இப்பசு போதுமானது; ஆதலின் நீ குருவிடஞ்சென்று விவரத்தைத் தெரிவி. முடியாத காரியத்தில் நீ என்ன செய்வாய்" எனக் கூறிற்று. இவ்வாறு கம்பீரமாய்க் கூறியதைக் கேட்டு மன்னவன் கடவுள் செயலெனத் தன்னைத் தேற்றிக் கொண்டான். பின்பு வேந்தன் "ஹே! மிருகேந்திரா! சாமர்த்தியமற்ற நான் கூறும் வார்த்தை பரிஹஸிக்கத்தக்கது; ஆயினும் நீ பிராணிகளின் மனதை யறிந்திருக்கிறாய்; ஆதலின் சொல்லுகிறேன். யாவற்றிற்கும் ஸிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரமாக மூன்றுக்கும் காரண பூதனாகிய சிவ பெருமானின் கட்டளையும் தள்ளத்தக்கதன்று; ஆஹிதாக்கினியாகிய வஸிஷ்ட முனிவரின் பசுவும் உபேக்ஷிக்கத்தக்கதன்று. நீ எனது சரீரத்தால் பாரணையை முடித்துக்கொண்டு ஸாயங்காலத்தில் தாய் வருமென்று எதிர் பார்த்துக்கொண்டிருக்கும் கன்றையுடைய மஹரிஷியின் இப்பசுவை விட்டுவிடு" எனக்கூறினான்.

பிறகு சிங்கம் வெண்குடை யோடுகூடி உலகத்துப் பிரபுவாயிருக்கிற நீ உனது யௌவனத்தையும், அழகான சரீரத்தையும், அல்பமான இப்பசு நிமித்தம் விடவிரும்புகிறாய். நீ பிராணியிடம் தயவினால் இப்பசுவைக் காத்தால், பிரஜைகள் முழுவதையும் காப்பது போய்விடும். ஒரே பசுவையுடைய வஸிஷ்ட முனிவர் அபராதத்தினால் கோபமடைந்தால், கோடிக்கணக்கான பசுக்களைக் கொடுத்துக் கோப

த்தை மாற்றிவிடலாம். ஆதலின், கல்யாண பரம்பரைகளைப் பூஜிக்கத்தக்க சரீரத்தை காப்பாற்று" என்றது.

அதனைக்கேட்டு திலீபன் "நாசத்தினின்றும் காப்பதாலன்றோ க்ஷத்திரியனென்று பெயர்; அவ்வாறு காக்காமல் இராஜ்யத்தை ஆளுவதால் யாதுபயன்? வஸிஷ்ட முனிவருக்கு வேறு பசுக்களைக் கொடுத்துக் கோபத்தைத் தீர்ப்பது முடியாத விஷயம்; ஏனெனில் இப்பசுக்குச் சமானமான பசு வேறில்லை. இப்பசுவை, எனது சரீரத்தை வாங்கிக்கொண்டு விட்டுவிடுவதே தகுதியானது. இதனால் உனது பாரணையும் பூர்த்தியாகின்றது. முனிவரின் ஹோமகாரியமும் நிறைவேறுகின்றது. ஆதலின் எனது வார்த்தையைத்தட்டுவது தகுதியன்று" எனக்கூறவே, ஸரியென்று சிங்கம் பசுவை விட்டுவிட்டது. திலீபன் சிங்கத்தின்முன் தனதுடலைப் பிண்டம்போல் ஒடுக்கி வைத்துக்கொண்டு நின்றான். சிங்கம் மேலே பாயப்போகிறதென்று குனிந்து நிற்கும் திலீபன்மீது வித்யாதரர்கள் அப்பொழுது மலர்மாரி பொழிந்தனர். "அப்பா! குழந்தாய்! எழுந்திரு" என்ற அமிருதம்போன்ற சொல்லைக் கேட்டு எழுந்ததும் முன்பு தாயைப்போன்ற பசுவைப் பார்த்தான். ஆச்சரியமடைந்த திலீபனை நோக்கிப் பசு "நான்தான் மாயையால் உன்னை பரீக்ஷிக்க இவ்வாறு செய்தேன். வஸிஷ்ட முனிவரின் பெருமையால் யமனும் என்னிடம் அணுக மாட்டான். குருவினிடம் பக்தியினாலும் என்னிடம் கருணையாலும் சந்தோஷமடைந்திருக்கிறேன். ஆதலின் உனக்கு வேண்டிய வரத்தைக்கேள்" என்றது. பின் திலீபன் ஸுதக்ஷிணையிடம் புத்திரனை வேண்டினான். அப்பசு "உனக்கு அவ்வாறே யுண்டாகும்; எனது பாலை ஒரு தொன்னையிற் கறந்து சாப்பிடு" எனக்கூறியது. திலீபன், கன்று ஊட்டியபிறகு ஹோமவிதி முடிந்தபின் முனிவரின் உத்தரவு

பெற்றுப் பாலைப் பருக விரும்புகிறேன்" எனக் கூறினன். இவ்வாறு கூறியதற்காக பசு மிகவும் சந்தோஷமடைந்து ஆச்ரமத்துக்குச் சென்றது. பிறகு திலீபன் நடந்த விர்த்தாந்தத்தை வஸிஷ்டருக்கும் ஸுதக்ஷிணைக்கும் கூறிக் கன்று ஊட்டி ஹோமவிதி முடிந்தபின் மிகுதியான பாலை முனிவரின் கட்டளையின்பேரில் மனைவியுடன் குடித்தான். காலையில் வஸிஷ்டரையும், அருந்ததியையும், அக்னியையும், பசுவையும் வலம் வந்து நமஸ்கரித்து விடைபெற்றுக்கொண்டு தனது நகரத்திற்குச் சென்றனன். பின்பு ஸுதக்ஷிணை கர்ப்பந்தரித்துப் பத்துமாதமானபின் உலகனைத்தும் ஒருகுடைக்கீழ் ஆளவல்லமையுள்ள புத்திரனைப் பெற்று நெடுங்காலம் இன்பமாய் வாழ்ந்து வந்தனர்:

சுபம்.

---

# South Indian Popular Tales

## Grade I

# தென்னிந்திய நீதி கதைகள்

## கிரேட் 1

விலை 2 அணு

## கதை—7.

முன் னொருகாலத்தில் விசாலை என்று ஒரு நகரமிருந்தது. அந்நகரத்தில் நந்தன் என்றொரு அரசனிருந்தான். அவன் தனது பராக்கிரமத்தால் பகைவர்களைத் தனது பாதபத்மங்களை ஸேவிப்பவர்களாகச் செய்து, ஏக சக்கிராதிபதியாக அரசாண்டு வந்தான். அவன் மன்னுயிரைத் தன்னுயிரெனக் கருதுவதில் மனுமாந்தாதவைப்போன்றவன். நற்குண நற்செய்கை களமையப் பெற்றவன்.

" தாயொக்கு மன்பிற்றவ மொக்கு நலம் பயப்பில்
சேயொக்கு முன்னின் றொரு செல்க யுய்க்கு நீரான்
நோயொக்கு மென்னின் வுருந்தொக்கு நுணங்கு கேள்வி
ஆயப் புகுங் காலறி வொக்குமெவர்க்கு மன்னூர்."

என்று கம்பர் தசாதரைப் புகழ்ந்தது நமது நந்தபூபாலனுக்கும் பொருந்தும். அவனுக்கு ஸர்வக்ஞன் என்று ஒரு மந்திரியும், பானுமதி என்று ஒரு பட்ட மகிஷியும், ஜயபாலன் என்று ஒரு புதல்வனும் இருந்தனர், அவ்வரசனுக்குப் பட்ட மகிஷியிடம் அன்பு அதிகமாயிருந்தது. அவன் சிங்காதனத்திலும் அவளுடன் கூடவே உட்கார்ந்து வந்தான்; நிமிஷ நேரமும் அவளை விட்டு பிரிந்திலன். ஒரு சமயம் அவனுடைய மந்திரி தன் மனதில், "இவ்விறைவன் ஸபை மத்தியில் சிங்காதனத்தில் ஸ்திரீயை உட்காரச் செய்கிறான். அப்பொழுது அனைவரும் அவளைப் பார்க்கின்றனர். அரசன் இக்காரியம் தகுதியற்றதென்பதை யறியவில்லை. அந்தோ! மன்னவன் அறியாமையை என்னென்று சொல்வது?" என்று பலவாறு சிந்தித்து, ஒரு சமயம் மன்னவன் தனியாயிருக்கையில், "வெற்றி வேந்தே! தங்களிடம் ஒரு விஷயம் தெரிவிக்க விரும்புகிறேன்" என்றான். அதைக் கேட்டு வேந்தன், 'மந்திரி! அவ்விஷயம் யாது? என்பதைச் சொல்!' என்றான்.

பின்பு அமைச்சன் "பாநுமதி ராணியார் தங்களுடன்சேர்ந்து சபையில் உட்காருவது அநுசிதமாகும். சூரியனைகாணாதவர்கள் ராஜஸ்திரீகள் என்பது வதந்தி. இங்கு பல ஜனங்கள் வந்து அவளைப் பார்க்கின்றனர். இது தகுதியாகுமா?" என்று தெரிவித்தான். உடனே வேந்தன், "நான் பாநுமதியைப் பாராமல் நொடிப்பொழுது மிருக்கவியலாது; அதற்கு ஏதேனும் உபாயமிருந்தால் தெருவி" எனவே, மந்திரி, அவளைச் சித்திரத்தில் எழுதச்செய்து பார்த்துக்கொண்டிருக்கலாமே! என்றான். அரசன் அமைச்சன் வார்த்தையைக் கேட்டு, அதையே அங்கீகரித்து, சித்திரம் வரைவதில் பேர்போன ஒரு சிற்பியை வரவழைத்து "பாநுமதியின் உருவத்தைச் சித்திரத்தில் நன்றாக வரைக" என்று கட்டளையிட்டான். உடனே சிற்பி பாநுமதியை நேரில் பார்த்துவிட்டு அவளைப் பத்மினி ஜாதியாகவும், ஸர்வாங்க சுந்தரியாகவும் மிக்க வேலைப்பாடுடன் வெகு திறமையாக எழுதி முடித்து மன்னவனிடம் கொடுத்தான். காவலன் அச்சித்திரத்தைப் பார்த்துப் பெரிதும் மகிழ்ந்து அவனுக்கு வெகுமதி யளித்தான். இதற்கிடையில் அரசன் குருவாகிய சதானந்தர் அங்கு வந்து சேர்ந்தார். பிறகு அவர் அப்படத்தைப் பார்த்துவிட்டுச் சிற்பியை நோக்கி, பாநுமதியின் ஸகல லாவண்ணியமும் இதில் வரையப்பட்டிருக்கின்றது; ஆனால் ஒன்றை வரைவதற்கு மறந்துவிட்டாய்" என்றார். உடனே சிற்பி, "பிரபுவே! தயவுசெய்து அஃதென்னவென்று தெரிவிக்கவேண்டுகிறேன்" என்றான். சதானந்தர் "அவளது இடது தொடையில் எள்ளைப்போன்ற மச்சம் ஒன்றிருக்கிறது. அஃது எழுதப்படவில்லை" எனப்புகன்றார். உடனே வேந்தன் சதானந்தர் என் மனைவியின் தொடையிலிருக்கும் அடையாளத்தை எவ்வாறு அறிந்திருக்கக்கூடும்? என் மனைவியின்

கற்பை இவர் குலைத்திருக்கவேண்டும். பெண்களின் மனதை அறியவும் கூடுமோ ? நம்மிடமிருந்து பலவிதமாய் உபகார மடைந்தும், சதானந்தர் நமக்கே துரோகம் செய்துவிட்டார். என்று தீர்மானித்து மந்திரியிடம் சதானந்தர் தலையை உடனே வாங்கிவிடும்படி வெகு கோபத்துடன் உத்தரவளித்தான். மந்திரியும் சதானந்தரைத் தெருவழியே கட்டியிழுத்துக் கொலைக்களத்திற்குக் கொண்டுபோகச்சொன்னான் உடனே அவர், "மன்னவனுடைய கோபத்தினால் தூய்மையுள்ளவனும் அபசுத்தனாகின்றான். எங்கும் முற்பிறப்பில்செய்த நல்வினையே அவனை காக்கின்றது. மனிதன் தீவினைப்பயன் நேரிட்டபோதும் நல்வினைப்பயன் நேரிட்டபோதும் அவற்றைத் தடுக்கமுடியாது. வீணே வருந்திப் பயனென்ன.

"உற்பால நீக்க லுறுவர்க்கு மாகா
பெற்ற பாலனையவு மன்னவா மாரி
வறப்பிற்றரு வாரு மில்லையதனைச்
சிறப்பிற்றணிபாரு மில்"

ஹா! ஈசா! ஒரு பிழையுமின்றி மன்னவன் என்னைக் கொல்வது நியாயமா?" என்று கூறிப் புலம்பினார். மந்திரி அதைப்பார்த்து, "நான் ஏன் பிராமணனைக்கொல்லவேண்டும்? இது பெரும் பாதகமன்றோ?" என்றெண்ணிச் சதானந்தரை விடுவித்து, இரகஸ்யமாகத் தன் வீட்டில் நிலவரைக்குள் மறைத்துவைத்தான். பிறகு மந்திரி வேந்தனிடம் தமது கட்டளை நிறைவேற்றப்பட்டது எனவே, மன்னவன் 'நல்லது' எனக் கொண்டாடி மகிழ்ந்தான்.

அப்பால் ஒரு சமயம் அரசன் புதல்வனாகிய ஜயபாலன் வேட்டையாடுவதற்காக கானகத்தைக்குறித்துச் சென்றான். அப்பொழுது பலதுற்சகுணங்கள்காணப்பட்டன. உடனே மந்திரி அப்பொழுது வேட்டையாடப் போகவேண்டாமென்று

பலதட்வை தடுத்துக் கூறினன். ஜயபாலன் அதைப்பொருட் படுத்தாமல் கிளம்பிச் சென்ருன். பிறகு ஜயபாலன் தன் சேனைகளுடன் பட்டணத்தினின்று வெளிக்கிளம்பி, காண்டா மிருகம், சிங்கம், புலி, கரடி, முள்ளம்பன்றி, செந்நாய், மான் முதலியவற்றின் கூட்டங்களால் நிறைந்த பெருங்காட்டிற் புகுந்து, மிருகங்களை நாலா பக்கமும் துறத்தினன். பிறகு அவன் ஒரு கலைமானைத் துரத்திக்கொண்டு வெகுதூரஞ் சென்று திரும்பிப் பார்க்கையில் தனது சேனைகளைக் காண வில்லை; சூரியன் மேற்றிசையை யடைந்துவிட்டான். இருள் பரவத் தொடங்கியது. தாகமோ அதிகரித்தது. அங்கே ஒரு ஓசை தென்பட்டது. உடனே அவன் குதிரையினின்றும் இறங்கி, குதிரையை ஓர் மரத்தில் கட்டி விட்டு, நீர் நிலையில் இறங்கித் தாகத்தைத் தணித்துக்கொண்டு, மரத்தடியில் உட் கார்ந்தான். அப்பொழுது அதிபயங்கரமான புலி ஒன்று தன் னைநோக்கிப் பாய்ந்து வருவதைக் கண்டான். அதைப் பார்த் துக் குதிரை கட்டையறுத்துக்கொண்டு வந்தவழியே வாயு வேகமாய்ப் பறந்து சென்றது. புலி ஸமீபத்தில் வரவே, ஜயபாலன் நடுநடுங்கி, ஒரு மரத்தில் வேகமாய் ஏறினன். அங்கு முன்னமே ஒரு கரடி ஏறிக்கொண்டிருப்பதைப் பார்த் துத் திகைத்து, "ஐயோ! தலைவலி போகத் திருவலி வந் தது போல, புலியைத் தப்பிக் கரடியிடம் அகப்பட்டுக்கொண் டேனே! என்று நினைத்து தீவாய்ப் புழுவாய்த் துடித்து, எங்கும் நிறைந்த பரமாத்மாவைத் தியானித்து, ஹாவென்று கதறி யழத் தொடங்கினன். ஜயபாலன் இவ்வாறு வருந்து வதைப் பார்த்த கரடி! ஓ ராஜகுமாரா! நீ பயப்படவேண் டாம். நீ என்னைச் சரணமடைந்து விட்டமையால் நான் உனக் குத் தீங்கு செய்யமாட்டேன். என்னிடம் நீ விசுவாசமடை ந்தால் புலியிடமும் பயப்படவேண்டாம்" என்றது. அதைக்

கேட்டு ஜயபாலன் "ஓ கரடியே! நான் இப்பொழுது உன்னைச் சரணமடைந்து விட்டேன்; என்னைக் காப்பாற்றினால் பெரும் புண்ணிய மேற்படும்" என்றான். பின்பு கரடியும் இவனை நேசித்தது. இதற்கிடையில் புலியும் அம்மரத்தடியில் வந்து சேர்ந்தது. இருளும் எங்கும் பரவிற்று. அப்பொழுது வேட்டையாடினதால் களைப்படைந்த ராஜகுமாரன் கரடியின் மடியில் தலை வைத்துக்கொண்டு சுகமாய்த் தூங்கினான். பின்பு புலியானது கரடியைப்பார்த்து, ஏ பல்லுகா! "இம்மனிதன் இயற்கையாகவே நமது ஜாதிக்கு விரோதி: நம்மைக்கொல்லவே இங்கு வந்திருக்கிறான். ஆதலின் பகைவனாகிய இவனை நீ மடியில் வைத்துக் கொள்வது தகுதியன்று; நீ உபகாரஞ் செய்தால் அவன் உனக்கு அபகாரமே செய்யப்போகிறான். ஆதலால் நீ அவனைக் கீழே தள்ளிவிடு; நான் அவனைப் புசித்துவிட்டுச் சுகமாய்ச் செல்லுகிறேன்; நீயும் உன்னிருப்பிடஞ் செல்லலாம்" என்று வேண்டிக்கொண்டது. கரடி, அதனைக் கேட்டு, "இவன் எவ்விதமாயிருப்பினும் என்னைச் சரணமடைந்திருக்கிறான்; சரணமடைந்தவனைக்கொன்றால் பெரும் பாதகம் வரும். நட்பைக் கெடுத்தவர்களும், சரணமடைந்தவரைக் கெடுத்தவர்களும் இருசுடருள்ளவரையில் கோரமான நரகத்தில் வசிக்கின்றனர். ஆதலின் நான் இம்மனிதனைத் தள்ளமாட்டேன்" என்றது. இதற்கிடையில் ஜயபாலன் தூங்கி யெழுந்தான். உடனே கரடி அவனைப்பார்த்து "நான் தூங்கப் போகிறேன்; நீ ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்" எனவே, அவனும் 'சரி' என்றான். பின்பு கரடி ஜயபாலன் மடியில் தலைவைத்துக்கொண்டு தூங்கிற்று. பிறகு புலி முன் போலவே ராஜகுமாரனைப் பார்த்து, 'ஏ ராஜகுமாரா! நீ கரடியிடம் விசுவாஸம் வைக்காதே; இது சஞ்சலசித்தமுள்ளது; அன்றியும் இது உன்னை என்னிடமிருந்து

காப்பாற்றித் தான் புசிக்க விரும்புகிறது. ஆதலின் நீ இதைக் கீழே தள்ளிவிடு நான் இதைப் புசித்துவிட்டுப் போகிறேன். நீயும் உனது நகரம் செல்லலாம்'' என்றது. அதைக் கேட்டு ஜயபாலன் கரடியைக் கீழே தள்ளத் தொடங்கினன். உடனே கரடி மரத்திலிருந்து நழுவி யிருந்தபோதிலும் வேறொரு கிளையைப் பற்றிக்கொண்டது. வீண் முயற்சியையுடைய ஜயபாலன் கரடியைக் கண்டு நடுங்கினன். அப்பொழுது கரடி கோபங்கொண்டு ',அடே! பாவி! ஏன் பயப்படுகிறாய் முன்செய்த தீவினையின் பயனை அநுபவித்தே தீர்க்கவேண்டும் ஆதலின் நீ "ஸஸேமிரா" என்று சொல்லிக்கொண்டு திரியக் கடவாய்'' என்று சபித்தது. அப்பால் பொழுதும் புலர்ந்தது, புலியும் மறைந்தது. கரடியும் தன்னிருப்பிடஞ் சென்றது. ஜயபாலனும் மரத்தினின்றும் இறங்கி, பேசுந்திறமையற்றவனாகி, 'ஸஸேமிரா' என்று சொல்லிக்கொண்டு அங்குமிங்கும் அலையத் தொடங்கினன்.

இது நிற்க, ஜயபாலன் புரவி பட்டணத்திற்கு வந்து சேர்ந்தது. ஜனங்கள் குதிரைமீது ராஜகுமாரனைக் காணுமல் அதை அரசனுக்குத் தெரிவித்தனர். பிறகு அரசன் மந்திரிகளை அழைத்து, "ஓ! அமைச்சர்காள்! வேட்டை யாடுவதற்காகக் குமாரன் செல்லும்பொழுது துர்நிமித்தங்கள் உண்டாயின வல்லவா? அப்படியிருந்தும் மதங்கொண்ட தனயன், அதை ஒரு பொருட்டா யெண்ணுது வனத்திற்குச் சென்முன். அதற்குப் பலன் இப்பொழுதே ஏற்பட்டுவிட்டது. அவன் ஏறிச்சென்ற குதிரை தனியே வந்திருக்கின்றது. ஆதலால் அவனைத் தேடும் பொருட்டு நாம் வனத்திற்குப் போவோம்'' என்முன். அதனை யாவரும் அங்கீகரித்தனர். பின்பு அரசன் மந்திரிகளுடனும் பரிவாரங்களுடனும் தன் தனயன் போனவழியே சென்று காடெங்கும் தேடினன்.

அங்கு ஓரிடம் அவன் ஊமையாய் வாக்கற்று, பைத்தியம் பிடித்தவனைப் போல 'ஸஸேமிரா' என்று கத்திக்கொண்டிருந்தான். பிறகு வேந்தன் அவனைப் பார்த்துத் துன்பக் கடலில் மூழ்கியவனாகி. அவனை அழைத்துக்கொண்டு தனது நகரம் வந்து சேர்ந்தான். அரசன் அவனது மடமையை நீக்குவதற்காகப் பலவிதமான சிகித்ஸைகள் செய்தான். ஒன்றிலும் குமாரன் சௌக்கிய மடையவில்லை. அப்பொழுது அரசன் மந்திரியை நோக்கி "இப்பொழுது சதானந்தர் இருந்தால் க்ஷணபொழுதில் பரிகாரஞ் செய்வார். நான் அவரை வீணே கொன்று விட்டேனே? ஒருகாரியத்தை ஆய்ந்தோய்ந்து விசாரித்த பின்பே செய்தல்வேண்டும், இல்லாவிடில் அளவற்ற இன்னல்கள் நேரும். நான் தெரியாமல் செய்துவிட்டேன். இதற்கென்ன பரிகாரம் செய்வது?" ஐயோ! ஹேசா! என்று பரிதபித்து துயரப்பட்டான். அதற்கு மந்திரி, "ஒருவருக்கு வரப்போகும் பயனை நோக்கி முன்னரே அறிவும் மாறிவிடுகிறது. இது கர்மாயத்தமாக ஏற்பட்டது. ஆயினும் பெரும் முயற்சி செய்யவேண்டும்" என்றான். அதைக் கேட்டு வேந்தன், "எவனொருவன் என் தனயனுக்கு எற்பட்டிருக்கும் விபத்தை நீக்கி ஸ்வஸ்தப் படுத்துகின்றானோ, அவனுக்குப் பாதி ராஜ்பத்தைக் கொடுப்பதோடு அவனுடைய ஸகல விருப்பங்களையும் நிறைவேற்றுவதாகப் பட்டணம் முழுவதும் பறைசாற்றுவி" என்றுரைத்தான். உடனே அரசன் அவ்வாறே செய்து தன் வீடு வந்து சேர்ந்து சதானந்தரிடம் விஷயங்கள் யாவற்றையும் ஆதியோடந்தம் கூறினான். சதானந்தர் அதற்றைக்கேட்டு, 'மந்திரி! நீ அரசனிடஞ்சென்று "மேற்கு தேசத்திலிருந்து என் வீட்டில் மாந்திரம் தெரிந்த ஒரு கோஷா ஸ்திரீ வந்திருக்கிறாள்; அங்கு வந்தால் உன் புதல்வனுக்குச் சௌக்கிய

மேற்படும் என்று தெரிவி,'' என்றார். அதைக் கேட்டு மந்திரி அவ்வாறே அரசனிடம் தெரிவித்தான்.

உடனே மந்திரி வீட்டில் ஒரு திரை போடப்பட்டது. அதன் உட்புறத்தில் சதானந்தர் உட்கார்ந்திருந்தார். வெளிப் புறத்தில் அரசன் புத்திரனுடனும் பரிவாரங்களுடனும் வந்து உட்கார்ந்தான். உடனே சதானந்தர், "ஓ ராஜகுமாரா! உன க்கு எவ்விடத்தில் யாது காரணத்தால் இவ்விபத்துநேர்ந்தது' எனவினவினர். அவன் வழக்கம்போல் 'ஸஸேமிரா' என்று பதிலுரைத்தான். பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம் சதானந் தர் பின் வரும் அர்த்தத்தையுடைய சுலோகத்தைக் கூறினர்.

"ஸத்பாவத்தை யடைந்தவர்களை வஞ்சிப்பதில் ஸாமர்த் தியமென்ன விருக்கின்றது? மடிமீது படுத்துறங்குவோனை கொல்வதில் என்ன சௌரியமிருக்கின்றது?''

இதைக் கேட்டதும் ராஜகுமாரனுக்குத் தான் செய்த பாவம் நினைவிற்கு வந்தது. அதனால் அவன் பச்சாத்தாப மடைந்து சொற்ப பாவம் குறைந்தது. பிறகு அவன் முதல் எழுத்தை விட்டுவிட்டு 'ஸேமிரா' என்று சொல்லத் தொடங் கினன். மீண்டும் சதானந்தர் பின் வருமாறுள்ள ஒரு சுலோ கத்தைக் கூறினர்.

"ஸமுத்திரத்திலுள்ள ஸேது வென்ற அணையையும் கங் கை கடற்சங்கமத்தையுங்கண்டு ப்ரும்மஹத்தியினின்றும் விடு படுகிறன். ஆனல் மித்திரத்துரோகம் இதனல் நீங்குவதில்லை."

இராஜகுமாரன் இதைக்கேட்டு இரண்டெழுத்துக்களை விட்டு 'மிரா' வென்று கத்தத் தொடங்கினன். பின்பு சதா னந்தர் பின் வரும்படியான சுலோகத்தைக் கூறினர்.

"மித்திரத் துரோகஞ்செய்தவன், நன்றிமறந்தவன், விசு வாஸத்தைக் கெடுத்தவன் ஆகிய மூவரும் இருசுடருள்ளள வும் நரகத்தில் வீழ்கின்றனர்.''

ஜயபாலன் இதைக்கேட்டு 'ரா' வென்று கத்தினன். சதானந்தர் பின் வரும்படியான மற்றோர் சுலோகத்தைக்கூறினர்.

"ஓ? அரசனே! நீர் உமது புதல்வனுக்கு மங்களத்தை விரும்பினல்பிராமணர்களுக்குத்தானத்தைச்செய். ஏனெனில் பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்னும் நான்கு வருணத்தார்க்கும் பிராமணனே குருவாகின்றான்."

இவ்வாறு சதானந்தர் கூறியதைக் கேட்டு ராஜகுமாரன் ஸ்வஸ்தனகித் தன்னுடைய விர்த்தாந்தங்களை யெல்லாம் விஸ்தாரமாகக் கூறினன். அதைக் கேட்டு அரசன், "ஏ கல்யாணி! நீ கிராமத்தில் வஸிக்கிறாய்; வனத்திற்குச் செல்லவில்லை; கரடி, புலி, மனிதன் இவர்கள் பேசியவற்றை நீ எவ்வாறு அறிகிறாய்?" என வினவினன். அதற்குச் சதானந்தர் பிரபுவே! ஸரஸ்வதி யானவள் பிராமணர்களின் அநுக்கிரகத்தால் எனது நாவில் வசிக்கின்றாள்; ஆதலின் நான் பாநுமதியின் மச்சத்தை அறிந்தது போல் யாவற்றையும் அறிகின்றேன்!" என்று விடையளித்தார். அதைக் கேட்டு மன்னவன் வியப்புற்றுத் திரையை விலக்குவதற்குள் சதானந்தர் தானே வெளிவந்து நின்றார். அப்பொழுது அரசன் புத்திரனுடன் அவரை ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்தான். சதானந்தரும் ஆசிர்வதித்தார். அப்பொழுது மந்திரி பூர்வ விர்த்தாந்தங்களைத் தெரிவித்தான். பின்பு வேந்தன் மந்திரியைப் பார்த்து, "நான் உமது சேர்கையினல் அபகீர்த்தியினின்றும் விடுபட்டேன்; ஆதலின் நல்லோருடன் சேரவேண்டும். நல்லினஞ் சேர்தல் [illegible]தும் வரப்போவதுமான ஆபத்தை நீங்குகின்றது. [illegible] கங்கை நீர் தாகத்தையும் தீவினையையும் நீக்குகின்றதல்லா? அன்றியும் அரசன் உம்மைப் போன்ற மந்திரிகளுடன் சேரவேண்டும். உம்மைப்போல் யூகசாலி யாருக்கின்[illegible] [illegible]து உதவியை என்றும் மறவேன்" என்று

எழும்பூர்
224874

பலவித்மாய்க் கொண்டாடி, ஸம்மானஞ் செய்து உபசரித்தான். அரசன் சதானந்தரை முன்போல ஆசிரியராக ஏற்படுத்திக்கொண்டு, அவரைப் பெரிதும் பெருமைப் படுத்திக் கொண்டாடினான். பிறகு அவ்வரசன் அம்மந்திரியுடனும் சதானந்தருடனும் பல்லாண்டு பூமியை நீதிவழுவாது பரிபாலித்து வந்தனன்.

“ இறப்ப நினையுங்கா லின்னா தெனினும்
பிறப்பினை யாரு முனியார்—பிறப்பினுள்
பண்பாற்று நெஞ்சத்தவர்களோ டெஞ் ஞான்றும்
நண்பாற்றி நட்கப் பெறின்.”

சுபம்.

---

**Ask your book-seller to supply**

# YAGNASWAMY'S TAMIL PICTORIAL ALPHABET CHART.

**SUPPLIMENT TO**

# PAPA BALA SIKSHA

**Price One Anna.**

*Corporation of Madras,*
6th Oct. 1916.

From
J. C. MOLONY Esq., I.C.S.

To
The Inspector of Schools, IV Circle.

Sir,

With reference to your endorsement N. Dis. 420 M. of 1916 in letter dated 25th August 1916, from Mr. S. Yagnaswamy, I have the honour to state that I approve of the recommendation that the two books "Lalitha" and "Three Brothers" by S. Yagnaswamy may be prescribed as text books for non-detailed study for the Forth Standard in Corporation Schools.

I have etc.
(Sd) J. C. MOLONY,
*President.*

(True Copy)

224874


BEGIN YOUR PAPA
WITH YAGNASWAMY'S
TAMIL PRIMER

PAPA BALA SIKSHA
BUILDS
BABIES'
BRAINS.

## S. எக்ஞுஸ்வாமி இயற்றிய புஸ்தகங்கள்.

### வித்தியாமூறை கைபழக்கம் அல்லது கைகண்பயிற்சி
### (காகித அட்டைவேலை)

மாணவர்கள் பதிப்பு. புதிதாய் வெளியிடப்பட்டது.

குழந்தைகளுக்கு கைத்தொழிலில் உணர்ச்சியை புகட்டும்

இச்சிறு புஸ்தகம் பிரத்யேகமாய் சிறு குழந்தைகளுக்கென்று அநேக வித்யாபிமானிகளின் தூண்டுதலின்பேரில் புதிதாய் வெளியிடப்பட்டிருக்கிறது. உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் சுமார் 40 படங்களுடன் உள்ளது. விலை அணு $2\frac{1}{2}$

வித்யாமுறை கைப்பழக்கம் அல்லது கை கண் பயிற்சி (காகித அட்டைவேலை) A Hand Book of Manual Training in Paper and Card Board Modelling. இதில் காகிதத்தையும் அட்டையையும் பலவிதமாய் உபயோகிக்கக்கூடிய சுமார் 75 படங்கள் அடங்கியுள்ளது. இப்புஸ்தகம் பிரத்யேகமாய் உபாத்தியாயர்களுக்கும் மேல் வகுப்பு மாணவர்களுக்கென்றும் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இது வரையில் இம்மாதிரியானபுஸ்தகம் தமிழில் கிடையாது. விலையும் ரொம்ப சொல்பந்தான். (Approved by the Text-Book Committee) 0—8—0

---

பள்ளிக்கூடங்களில் கீழ்வகுப்புகளில் உப பாட புஸ்தகங்களாக உபயோகப்படுத்தக்கூடிய தமிழ் கதை புஸ்தகங்கள்.

சென்னை வித்தியா

இலாகா அதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட்டவைகள்.

1. லலிதா அல்லது பொருத்தார் பூமியாள்வார் 0—4—0
2. மூன்று சகோதரர்கள் அல்லது உழைப்பின் சிறப்பு 0—4—0
3. ஷராப்கான் அல்லது குடியினல் வருங்கேடு 0—3—0
4. கதாவாசகம் (ஷை மூன்றும் சேர்ந்தது) 0-10—0
5. தென்னிந்திய நீதிக் கதைகள் 0—2—0

V. S. வெங்கட்டருமன் & கோ.,
பாரத இண்டஸ்டிரியல்ஸ் கட்டடம்,
பெரியதெரு, கும்பகோணம்.

...ANS PRESS, MADRAS.

# SELECT OPINIONS.

1. "Mr. S. Yagnaswami Aiyer's Tamil Primer (Bala Siksha) of the Reformed Series is written according to the rational and scientific Principles of teaching young children and is well adapted for the use in lowest classes in our Elementary schools. The method adopted is intelligent and the get up of the book is attractive. I wish Mr. Yagnaswami's enterprise every success."

M. RAMASWAMI IYENGAR, B.A., L.T.
*Retired Inspector of Schools.*

---

2. "I went through the Tamil first book (Balasiksha) by Mr. Yagnaswami of the Government Training School, Tanjore. It is written in conformity with the accredited Psychological Principles and each lesson gradually leads on to the next by easy stages of modification. I wish the author all success in his attempt to lighten the burden of our young ones who has to master unlike the European children, the rather complicated and difficult alphabet of ours."

S. K. YAGNANARAYANA IYER, M.A.
*Principal, Salem College.*

---

3. "I have gone through Mr. S. Yagnaswami's First Reader (Reformed Series) and consider its quite suited to the purpose it is intended for. It is prepared on right lines and deserves encouragement."

Rev. N. G. PONNAIYA, B.A., L.T.
*Vice Principal, Findley College, Mannargu*